குர்ஆன்

அறிவியலை முன்னறிவிப்பு செய்ததா?

(இனியும் தொடர்ந்து செய்யுமா?)



"நம்ம இப்பதானே கொஞ்ச கொஞ்சமா கண்டுபிடிக்கறோம், 1450 வருடத்திற்கு முன்பே குர்ஆன் அனைத்தையும் மிகத்தெளிவா சொல்லுதே!"



தொகுப்பு

இப்னு முஹம்மத்

MASFOT
Raise Yourself To Help Mankind
NABA

MAS Foundation Trust, No.19,Thacker Street,Purasawalkam,Chennai-84.

88388 92393

உலகம் படைக்கப்பட்டு முதல் மனிதன் ஆதமின் உருவாக்கத்திற்கு பின் மூன்று முக்கிய கொள்கைகளை முன்னிறுத்தியே இறைவன் இந்த உலகத்தை இயக்குக்கிறான். இன்னும் இவ்வுலகம் முடிவு (அழிவு)க்கு வரும் வரை இவ்வாறே இயங்கும். அந்த மூன்றையும் கீழ்கண்ட புத்தகங்கள் மூலம் நீங்கள் தெளிவாக அறிந்து கொள்ள முடியும். தவறாமல் படிக்கவும். உங்கள் சந்ததிகளையும் படிக்க ஆர்வமூட்டவும்.



ஏகத்துவம்



தூதுத்துவம்



மரணத்திற்குப் பின்

குர்ஆன்

அறிவியலை

முன்னறிவிப்பு செய்ததா?

[இனியும் தொடர்ந்து செய்யுமா?]

தொகுப்பு:

இப்னு முஹம்மத்

MASFOT
Raise Yourself To Help Mankind
NABA
MAS FOUNDATION TRUST

MAS Foundation Trust
No.19, Thacker Street,
Purasawalkam.
Chennai 600 084.
Mobile: 88388 92393

FREE DISTRIBUTION ONLY
இலவச விநியோகத்திற்கு மட்டும்

ABOUT THIS BOOK

Name of the Book	:	**QURAN ARIVIYALAI MUNARIVIPPU SEITHATHA?**
Author	:	**Ibn Muhammad**
Assisted by	:	Sheikh & Sheikh
Language	:	Tamil
Edition	:	1st Edition (? 2025)
Copies	:	1000
Total Pages	:	74
Published by	:	**MAS Foundation Trust** No.19, Thacker Street, Purasawalkam, Chennai - 600 084. Mobile: **88388 92393**

உள்ளே...

✸ பதிப்புரை..... 5

1. ஒலி அதிர்வு..... 9
2. உயரே ஏறிச் செல்லுதல்.....10
3. இரும்பு.....11
4. பிரபஞ்ச விரிவாக்கம்..... 12
5. சூரியன் மற்றும் சந்திரன்..... 13
6. கிரகம் மற்றும் அதனின் சுற்றுப் பாதை.....14
7. மலைகள்.....15
8. தண்ணீர்.....16
9. வானம்..... 17
10. கடல்.....18
11. பெருவெடிப்புக் கோட்பாடு.....19
12. திருப்பி கொடுக்கும் வானம் 20
13. விண்வெளிப் பயணம் சாத்தியம் 21
14. வானத்திற்கு ஒரு பாதுகாக்கப்பட்ட கேடயம் உள்ளது..... 22
15. தூக்கமும், மரணமும்..... 23
16. பூமியில்தான் வாழ முடியும்.....24
17. ஓரங்களில் குறையும் பூமி..... 25
18. பூமியை தொட்டிலாக..... 26
19. பூமிக்கு அடியில் எவ்வளவு ஆழத்திற்குச் செல்ல முடியும்?..... 28
20. நிலத்தடி நீர் எவ்வாறு சேமிக்கப்படுகிறது?..... 29
21. மனிதர்களால் குறையும் பூமி..... 30
22. ஆழ் கடலில் அலை..... 31
23. மலட்டுக் காற்று.....32

24. மாதங்கள் பன்னிரண்டு..... 33
25. சூரியனும் கோள்களும் ஓடுகின்றன..... 34
26. கருவில் குழந்தையின் வளர்ச்சி..... 36
27. கலப்பு விந்துவிலிருந்து மனிதனின் உற்பத்தி..... 37
28. ஜோடி, ஜோடிகளாக..... 38
29. விந்தின் பிறப்பிடம்..... 40
30. கர்ப்ப அறையின் தனித் தன்மை..... 41
31. விரல் ரேகையின் முக்கியத்துவம்..... 42
32. பால் எவ்வாறு உற்பத்தியாகிறது?..... 43
33. தேன் எவ்வாறு உற்பத்தியாகிறது?..... 44
34. நவீன வாகனங்கள் பற்றிய முன்னறிவிப்பு..... 45
35. பெருங்கவலை போக்கும் அருமருந்து..... 47
36. வேதனையை உணரக்கூடிய நரம்புகள்..... 49
37. பாதுகாக்கப்படும் திருக்குர்ஆன்..... 50
38. பாதுகாக்கப்பட்ட பிர்அவ்ன் உடல்..... 51
39. நூஹ் நபியின் கப்பல்..... 52
40. பெரிய நெருக்கடி கோட்பாடு..... 54
41. முன் நெற்றி..... 55
42. முரண்பாடு..... 56
43. தரவு மீட்பு..... 57
44. மேகங்களின் உருவாக்கம்..... 58
45. எறும்புகளுக்கு இடையேயான தொடர்பு அமைப்பு..... 59
46. கருவின் பாலினத்தை ஆண் தீர்மானிக்கிறார்..... 60
47. பறவைகளின் பறக்கும் படலம்..... 61
48. ஒளியின் வேகம்..... 62
✸ இறுதியாக..... 63
✸ முஸ்லிமாக ஆவதும் முஸ்லிமாக இருப்பதும் எப்படி?..... 64

பதிப்புரை

அன்பார்ந்த வாசகர்களே!

நீங்கள் குரான் கூறும் அறிவியல் உண்மைகளை பற்றி இப்புத்தகம் மூலம் அறியவிருப்பதால் குரானை பற்றிய சிறிய விளக்கம் உங்களுக்கு அவசியமாகிறது.

குர்ஆனைப் பற்றி....

- **நாம் வாழும் அகில உலகமும் எப்படி படைக்கப்பட்டது?**
- **எப்படி நேர்த்தியாக படைக்கப் பட்டிருக்கிறது?**
- **படைத்த இறைவனின் இலக்கணம் என்ன?**
- **முதல் மனிதன் படைக்கப்பட்டதின் நோக்கம்?**
- **அவனின் சந்ததி பல்கி பெருகியதின் அவசியம் என்ன?**
- **இந்த 60-70 வயது கால வாழ்க்கை ஏன்?**
- **மனிதனை நேர்வழி காட்ட இறைவன் தூதரை எப்படி தேர்ந்தெடுக்கிறான்?**

மேற்கண்ட அவசியமான கேள்விகளுக்கான பதிலை கீழ்க்கண்ட விளக்கங்களின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

அகில உலகத்தையும் படைத்து பரிபாலிக்கும் அந்த ஏக இறைவன் முதல் மனிதனாகிய **ஆதாம்** மற்றும் அவருடைய மனைவியாகிய **ஏவாள்** அவர்கள் இருவரையும் படைத்ததற்குப் பிறகு மூன்று முக்கிய அடிப்படை **கட்டளைகளைக்** கொண்டே இந்த மனித குலத்தை இதுவரை இறைவன் வழி நடத்திக் கொண்டு வந்திருக்கிறான்

அந்த **மூன்று** முக்கிய **கட்டளைகள்** என்னவென்று பார்த்தால்;

1) கட்டளை நம்பர் ஒன்று: **ஏகத்துவம்**

அகில உலகங்களையும் படைத்து பரிபாலிக்கும் அந்த ஏக இறைவன் ஒருவனை மட்டுமே வணங்க வேண்டும்.

2) கட்டளை நம்பர் இரண்டு: **தூதுத்துவம்**.

இறைவன் மனித உருவில் உலகத்திற்கு வரமாட்டான். அது அவனுக்கு தகுமானதல்ல. இதுதான் நாம் முதலில் விளங்க வேண்டிய முக்கியமான உண்மை. அதற்கு பதிலாக தான் படைத்த மனித குலத்திலேயே சிறந்த ஒருவரை இறைவனே தூதராக தேர்ந்தெடுக்கிறான். (எப்படி நாம் வகுப்பில் கிளாஸ் லீடரை தேர்ந்தெடுக்குறோமோ அதன்படி) அவர் மூலமாக இறைவன் தன் கட்டளைகளை மனித குலத்திற்கு அனுப்புவான்.

தூதர் ஏன்?

அந்த தூதர்கள் அனைவருமே சாதாரண மனிதர்களே! அவரவர்கள் வாழும் சமுதாயத்திற்காக அவர் இறைவன் கட்டளையிட்ட பிரகாரம் **1. "இறைவனை மட்டுமே வணங்க வேண்டும்"** என்றும் **2. "இறைவனுடைய கட்டளைகளை பின்பற்ற வேண்டும்"** என்று சொல்வதோடு மட்டுமல்லாமல் அவரே அந்த (தூதரே) கட்டளையை மனிதனாக இருப்பதினால் பின்பற்றி நமக்கு வழி நடத்திக் காட்டுவார். அதற்கு காரணம் **மனிதனால் இறைவன் இட்ட கட்டளைகளை பின்பற்றி நடக்க சாத்தியமானதே** என்பதை நிரூபிப்பதற்காகவே இறைவன் மனிதர்களையே தூதராக தேர்ந்தெடுக்கிறான்.

எந்த தூதரை இறைவன் இந்த உலகத்திற்கு வழிகாட்ட அனுப்பினானோ / தேர்ந்தெடுத்தானோ அந்த தூதரையே நாம் பின்பற்ற வேண்டும் அதாவது அந்த தூதர் காட்டித் தரும் ஏவல், விலக்கல்களை அதாவது 'எதை செய்ய வேண்டும்', 'எதை செய்யக்கூடாது' என்பதை அவரே சொல்லி தந்து அதையே அவரும் பின்பற்றி நமக்கு முன்னுதாரணமாக அவர் நம்மை வழி நடத்துவார். அவரை பின்பற்றி வாழக்கூடிய நாமும் அவர் சொல்லுகிற கட்டளைகளை ஏற்று அவர் விலக்கக்கூடியவைகளை விலக்கி வாழ வேண்டியது இரண்டாவது கட்டளை.

3) கட்டளை நம்பர் மூன்று: **மறுமை** (இறப்பிற்கு பிறகு உள்ள வாழ்க்கை)

நாம் அனைவருமே ஒருநாள் அதாவது நமக்கு குறிப்பிடப்பட்ட தவணை நெருங்கும்போது இறந்து விடுவோம். இந்த உலகத்தில் நாம் அனுப்பப்பட்டதின் நோக்கம்; நாம் பிறந்ததிலிருந்து நமக்கு விதிக்கப்பட்ட இறப்பு வரும் வரை நாம் அந்த ஏக இறைவனை மட்டுமே வணங்கி அவனுடைய கட்டளைகளை (வேதம் + தூதரின் வழிகாட்டுதல்) ஏற்று நடந்தால் இறந்ததற்குப் பிறகு இறைவன் முடிவில்லாத ஒரு உலகத்தில் சொர்க்கத்தை தருவதாகவும், இறைவனை ஏற்க மறுத்தோ (கடவுள் மறுப்புக் கொள்கை) அல்லது இறைவனை வணங்க தவறியோ (தான் தோன்றித்தனமாக, மனோ இச்சையின்படி வாழ்வதினாலோ) அல்லது இறைவன் அல்லாதவர்களை ஆதாரமில்லாமல் வணங்குவதன் மூலமாகவோ (எங்கள் மூதாதையர்கள் எதில் இருக்கக் கண்டோமோ அதையே பின்பற்றுவோம்) என்று நடப்பதினாலோ நமக்கு இறப்பிற்குப் பிறகு தண்டனையாக நரகத்தை, முடிவில்லாத உலகத்தில் நரகத்தையே சித்தப்படுத்தி வைத்திருக்கிறான் என்பதே அந்த மூன்றாவது முக்கிய கட்டளையாகும்.

குர்ஆன் இதற்கு முன்பே வந்த தூதர்களையும், வேதங்களையும் உறுதிபடுத்துகிறது. முதல் மனிதன் ஆதம் தொடங்கி ஜீசஸ் வரைக்கும் வந்த எல்லா இறைத்தூதர்களையும் உண்மைப்படுத்துவதோடு கடைசி இறைத்தூதர், இன்றைக்கு இருக்க கூடிய சவுதி அரேபியாவில் சுமார் 1450 வருடங்களுக்கு முன்பு முஹம்மது நபி (அலை) பிறக்கிறார்கள் அவர்களுடைய நாற்பதாவது வயதில் இறைவன் அவர்களை தூதராக தேர்ந்தெடுக்கிறான் அவர்களுடைய 63 வது வயதில் அவர்கள் இறக்கிறார்கள். இந்த 23 வருட வாழ்க்கையில் ஏக இறைவன் குர்ஆனை முஹம்மது அவர்களுக்கு ஜீப்ரீல் என்ற வானவர் மூலம் இறக்கி அருளினான். இதுவே இறுதி வேதம். இதற்க்கு பிறகு உலகம் அழியும் வரை எந்த வேதமும் வராது முஹம்மது நபிக்கு பிறகு வேற எந்த தூதரும் வர மாட்டார்கள்! 1450 வருடமாக எந்தவிதமான மாற்றங்களுக்கும் உள்ளாமாகல்

இருப்பதற்க்கு காரணம் இறுதி வேதமாக இருப்பதால் இறைவனே குர்ஆனை பாதுகாக்க பொறுப்பேற்றுக் கொண்டான். இந்த கடைசி இறைவேதம் (குர்ஆன்) முக்காலங்களையும் தெளிவர (Crystal Clear ஆக) உணர்த்தும். நிரூபிக்கப்பட்ட அறிவியலு (Established Scientific facts)க்கு குர்ஆன் (இதுவரை முரண்படவில்லை) முரண்படாது. ஆகையினால் கண்டுபிடிக்கப்பட்ட மற்றும் கண்டுபிடிக்கப் போகின்ற அறிவியலை உள்ளடக்கியதாகவே குர்ஆன் (இதுவரை இருக்கிறது). இருக்கும்.

இனி இப்புத்தகம் மூலம் இதுவரை நிரூபிக்கப்பட்ட அறிவியலும் (Established Scientific facts)க்கு உட்பட்டவைகளை காண்போம். இதன் மூலம் எதுவுமே அறிந்திடாத (அறிவியல் வளர்ச்சி அடையாத) காலத்தில் அதாவது இன்றைக்கு 1450 வருடங்களுக்கு முன்பே இவ்வளவு தெளிவாக குரான் முன்னறிவிப்பு செய்கிறது என்றால் இது உலகத்தையே படைத்து பரிபாலிக்கின்ற இறைவனிடமிருந்துதான் வந்திருக்க முடியும் என்பதை நீங்கள் தெளிவற அறிந்து கொள்ள முடியும். இனி என்ன குரானை அருளிய இறைவனையும், அவனின் தூதரையும் நம்பிக்கை கொண்டு உங்கள் வாழ்க்கையை யை அதன்படி அமைத்துக் கொள்ள முன் வாருங்கள் சகோதர/சகோதரிகளே!.

இறைவன் நேர்வழி காட்டுவானாக!

“நிச்சயமாக (இவ்வேதம்) உண்மையானது தான் என்று அவர்களுக்குத் தெளிவாகும் பொருட்டு நம்முடைய அத்தாட்சிகளை (உலகத்தின்) பல கோணங்களிலும், அவர்களுக்குள்ளேயும் சீக்கிரமே நாம் அவர்களுக்குக் காண்பிப்போம்; (நபியே!) உம் இறைவன் நிச்சயமாக எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பது உமக்குப் போதுமானதாக இல்லையா?”

– (குரான் 41:532)

1. ஒலி அதிர்வு

குரான் 69:13-14

கடைசியாக, **எக்காளம்** ஊர் ஒலிக்கப்படும்போது பூமியும் மலைகளும் ஒரே அடியால் தூக்கி நசுக்கப்படும்.

அறிவியல்

ஒலி யதார்த்தத்தை மாற்றும். ஒலி அதிர்வுகள் நம்மைச் சுற்றியுள்ள உலகத்தை எவ்வாறு வடிவமைக்கின்றன என்பதை சைமடிக்ஸ் அறிவியல் வெளிப்படுத்துகிறது. விஞ்ஞானம் கண்டுபிடித்தது நம்பமுடியாதது. ஒலி பொருள்களை அசைக்கச் செய்யும். அது தண்ணீரை கொதிக்க வைக்க முடியும். இது சுவரை துளைக்க முடியும். நம்பினாலும் நம்பாவிட்டாலும் சூறாவளியை கூட உருவாக்கலாம்.

2. உயரே ஏறிச் செல்லுதல்

குரான் 6:125

யாரை அவன் வழி கெடுக்க நாடுகிறானோ, அவருடைய நெஞ்சை, வானத்தில் ஏறுபவன் நெஞ்சைப் போல் இறுகிச் சுருங்கும்படிச் செய்கிறான்.

அறிவியல்

நீங்கள் மேலே செல்ல, செல்ல மார்பு இறுக்கமாகிறது.

3. இரும்பு

குரான் 57:25

இன்னும், இரும்பையும் நாம் இறக்கினோம்; அதில் கடினமான சக்தியும் மனிதர்களுக்குப் பல பயன்களும் இருக்கின்றன.

அறிவியல்

“இரும்பு பூமியிலிருந்து வரவில்லை”

4. பிரபஞ்ச விரிவாக்கம்

குரான் 51:47

மேலும், நாம் வானத்தை (நம்) சக்திகளைக் கொண்டு அமைத்தோம்; நிச்சயமாக நாம் விரிவாற்றலுடையவராவோம்.

அறிவியல்

“பெருவெடிப்புக்குப் பிறகு பிரபஞ்சம் விரிவடைந்து வருகிறது.”

5. சூரியன் மற்றும் சந்திரன்

குரான் 10:5

அவன்தான் சூரியனைச் (சுடர்விடும்) பிரகாசமாகவும், சந்திரனை ஒளிவுள்ளதாகவும் ஆக்கினான். ஆண்டுகளின் எண்ணிக்கையையும், காலக்கணக்கையும் நீங்கள் அறிந்து கொள்ளும் பொருட்டுச் சந்திரனாகிய) அதற்கு மாறி மாறி வரும் பல படித்தரங்களை உண்டாக்கினான்;

அறிவியல்

சந்திரன் ஒளிர்வதில்லை ஆனால் சூரிய ஒளியை பிரதிபலிக்கிறது.

6. கிரகம் மற்றும் அதனின் சுற்றுப் பாதை

குரான் 21:33

இன்னும் அவனே இரவையும், பகலையும்; சூரியனையும், சந்திரனையும் படைத்தான்; (வானில் தத்தமக்குரிய) வட்டவரைக்குள் ஒவ்வொன்றும் நீந்துகின்றன.

அறிவியல்

“ஒவ்வொரு கிரகத்திற்கும் அதன் சொந்த சுற்றுப்பாதை உள்ளது.”

7. மலைகள்

குரான் 21:31

இன்னும்/இப்பூமி (மனிதர்களுடன்) ஆடி சாயாமலிருக்கும் பொருட்டு, நாம் அதில் நிலையான மலைகளை அமைத்தோம்; அவர்கள் நேரான வழியில் செல்லும் பொருட்டு, நாம் விசாலமான பாதைகளையும் அமைத்தோம்.

குரான் 16:15

உங்களுடன் பூமி அசையாதிருப்பதற்காக அவன் அதன் மேல் உறுதியான மலைகளை நிறுத்தினான்; இன்னும் நீங்கள் சரியான வழியை அறிந்து செல்)வதற்காக அவன் ஆறுகளையும் பாதைகளையும் (அமைத்தான்).

அறிவியல்

மலைகள் பூமியின் சுழற்சி இயக்கத்தை உறுதிப்படுத்தும் ஈர்ப்பு விசைகள் ஆகும். மலையானது பூமியின் மேலோடு நிலைப்படுத்தியாகச் செயல்படுகிறது மற்றும் அது முழுவதும் சறுக்குவதைத் தடுக்கிறது.

8. தண்ணீர்

குரான் 21:30

உயிருள்ள ஒவ்வொன்றையும் நாம் தண்ணீரிலிருந்து படைத்தோம் என்பதையும் காஃபிர்கள் பார்க்கவில்லையா? (இவற்றைப் பார்த்தும்) அவர்கள் நம்பிக்கை கொள்ள வில்லையா?

அறிவியல்

அனைத்து உயிரினங்களுக்கும் நீர் முக்கிய கூறுகளில் ஒன்றாகும்; சில உயிரினங்களில் அவற்றின் உடல் எடையில் 90% தண்ணீரிலிருந்து வருகிறது. வயது வந்த ஒவ்வொரு மனிதனின் உடலிலும் 60% வரை தண்ணீர் உள்ளது.

9. வானம்

குரான் 21:32

இன்னும் வானத்தை நாம் பாதுகாப்பான விதானமாக அமைத்தோம் - எனினும் அவர்கள் அவற்றிலுள்ள அத்தாட்சிகளைப் புறக்கணித்து விடுகிறார்கள்.

அறிவியல்

பூமியின் வளிமண்டலத்தில் சூரிய ஒளியை சிதறடிக்கும் வாயுக்கள் உள்ளன, சூரிய ஒளி, புற ஊதா மற்றும் மின்காந்த கதிர்வீச்சிலிருந்து பாதுகாக்கிறது. இது பூமிக்குள் வெப்பத்தைத் தக்கவைத்து, விண்வெளியின் குளிர் வெப்பநிலையிலிருந்து (-270˚c) பாதுகாக்கிறது.

10. கடல்

குரான் 55:19-20

அவனே, இரண்டு கடல்களையும் ஒன்றோடொன்று சந்திக்கச் செய்தான். (ஆயினும்) அவற்றிடையே ஒரு தடுப்பும் இருக்கிறது; அதை அவை மீறமாட்டா.

அறிவியல்

இரண்டு வெவ்வேறு கடல்கள் சந்திக்கும் இடங்களில், அவற்றுக்கிடையே ஒரு தடுப்பு இருப்பதை நவீன அறிவியல் கண்டுபிடித்துள்ளது. இந்த தடையானது இரண்டு கடல்களையும் பிரிக்கிறது, இதனால் ஒவ்வொரு கடலுக்கும் அதன் சொந்த வெப்பநிலை, உப்புத்தன்மை மற்றும் அடர்த்தி உள்ளது. உதாரணமாக, அட்லாண்டிக் பெருங்கடல் நீருடன் ஒப்பிடும்போது, மத்தியதரைக் கடல் நீர் கூடாகவும், உப்புத்தன்மையுடனும், அடர்த்தி குறைவாகவும் இருக்கும்.

11. பெருவெடிப்புக் கோட்பாடு

குரான் 21:30

நிச்சயமாக வானங்களும், பூமியும் (முதலில்) இணைந்திருந்தன என்பதையும், இவற்றை நாமே பிரித்(தமைத்) தோம் என்பதையும், உயிருள்ள ஒவ்வொன்றையும் நாம் தண்ணீரிலிருந்து படைத்தோம் என்பதையும் காஃபிர்கள் பார்க்கவில்லையா? (இவற்றைப் பார்த்தும்) அவர்கள் நம்பிக்கை கொள்ள வில்லையா?

அறிவியல்

பெருவெடிப்புக் கோட்பாடு சுமார் 12-15 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பிரபஞ்சம் மிகவும் வெப்பமான மற்றும் அடர்த்தியான ஒரு புள்ளியில் இருந்து தோன்றியது, இந்த புள்ளியின் வெடிப்பின் காரணமாக பிரபஞ்சம் தோன்றியது.

12. திருப்பி கொடுக்கும் வானம்

குரான் 86:11-14

(திரும்பத் திரும்பப்) பொழியும் மழையை உடைய வானத்தின் மீது சத்தியமாக,

(தாவரங்கள் முளைப்பதற்குப்) பிளவு படும் பூமியின் மீதும் சத்தியமாக,

நிச்சயமாக இது (குர்ஆன் சத்தியத்தையும், அசத்தியத்தையும்) பிரித்து அறிவிக்கக்கூடிய வாக்காகும்.

அறிவியல்

"வானம் கடல் மற்றும் நீர்நிலைகளில் இருந்து உறிஞ்சும் தண்ணீரை சுமந்துகொண்டு மழையாக நமக்குத் திருப்பித் தருகிறது."

இங்கிருந்து அனுப்பப்பட்ட ஒலி அலைகளை வானம் நமக்குத் திருப்பித் தருகிறது.

மேல்நோக்கி அனுப்பப்படும் செய்திகள் ஒரு கட்டத்தில் இடைமறித்து மீண்டும் எங்களுக்கு திருப்பி அனுப்பப்படுகிறது.

13. விண்வெளிப் பயணம் சாத்தியம்

குரான் 55:33

“மனு, ஜின் கூட்டத்தார்களே! வானங்கள், பூமி ஆகியவற்றின் எல்லைகளைக் கடந்து செல்ல நீங்கள் சக்தி பெறுவீர்களாயின், (அவ்வாறே) செல்லுங்கள்; ஆனால், (வல்லமையும் நம்) அதிகாரமும் இல்லாமல் நீங்கள் கடக்க முடியாது.

குரான் 51:7

அழகு (பாதை) நிரம்பிய வானத்தின் மீது சத்தியமாக!

அறிவியல்

விண்வெளிப் பயணத்திற்குப் பின்னால் உள்ள அறிவியல்:

"ஈர்ப்பு விசையை முறியடித்தல்"

நியூட்டனின் மூன்றாவது இயக்க விதியின்படி செயல்படும் உந்துதலால் இது சாத்தியமானது: ஒவ்வொரு செயலுக்கும் சமமான மற்றும் எதிர் வினை உள்ளது. நடைமுறையில், ஒரு ராக்கெட் இயந்திரம் வாயுவை பின்னோக்கி வெளியேற்றும் போது, அது ராக்கெட்டை முன்னோக்கி தள்ளுகிறது.

14. வானத்திற்கு ஒரு பாதுகாக்கப்பட்ட கேடயம் உள்ளது

குரான் 2:22

அ(ந்தஇறை)வனே உங்களுக்காக பூமியை விரிப்பாகவும், வானத்தை விதானமாகவும் அமைத்து, வானத்தினின்றும் மழை பொழியச்செய்து; அதனின்று உங்கள் உணவிற்காகக் கனி வர்க்கங்களை வெளிவரச் செய்கிறான்; (இந்த உண்மைகளையெல்லாம்) நீங்கள் அறிந்து கொண்டே இருக்கும் நிலையில் அல்லாஹ்வுக்கு இணைகளை ஏற்படுத்தாதீர்கள்.

குரான் 21:32

இன்னும் வானத்தை நாம் பாதுகாப்பான விதானமாக அமைத்தோம் -எனினும் அவர்கள் அவற்றிலுள்ள அத்தாட்சிகளைப் புறக்கணித்து விடுகிறார்கள்.

குரான் 40:64

அல்லாஹ்தான் உங்களுக்கு இப்பூமியைத் தங்குமிடமாகவும், வானத்தை ஒரு விதானமாகவும் உண்டாக்கியிருக்கிறான்.

குரான் 52:5

உயர்த்தப்பட்ட முகட்டின் மீது சத்தியமாக!

அறிவியல்

விண்ணிலிருந்து வருகின்ற புற ஊதாக் கதிர்கள் வானத்தில் வடிகட்டப்படுகின்றன. அங்கிருந்து வருகின்ற எரிகற்களின்வேகம் கட்டுப்படுத்தப்பட்டு எரிக்கப்பட்டு கேடு விளைவிக்காத அளவில் கீழே விழுகின்றன. மேலே இருக்கின்ற முகடு சூரியனின் அளவு கடந்த வெப்பத்தைக் குறைகிறது.

15. தூக்கமும், மரணமும்

குரான் 39:42

அல்லாஹ், உயிர்களை அவை மரணிக்கும் போதும், மரணிக்காதவற்றை அவற்றின் நித்திரையிலும் கைப்பற்றி, பின்பு எதன் மீது மரணத்தை விதித்துவிட்டானோ அதைத் தன்னிடத்தில்) நிறுத்திக் கொள்கிறான்; மீதியுள்ளவற்றை ஒரு குறிப்பிட்ட தவணை வரை (வாழ்வதற்காக) அனுப்பி விடுகிறான் - சிந்தித்துப் பார்க்கும் மக்களுக்கு, நிச்சயமாக அதில் அத்தாட்சிகள் இருக்கின்றன.

அறிவியல்

உறங்கும் போதும் மரணத்தின் போதும் உடலிலிருந்து ஏதோ ஒன்று வெளியேறுகிறது. வெளியே போகின்ற அந்த ஒன்று தூங்கிக் கொண்டிருக்கும் மனிதனிடம் திரும்புகிறது, அதனால் அவன் எழுகிறான் ; இருப்பினும் அந்த வெளியேறும் ஒன்று இறந்த ஆன்மாவிற்கு (திரும்ப) வருவது இல்லை.

16. பூமியில்தான் வாழ முடியும்

குரான் 2:36

பூமியில் ஒரு குறிப்பிட்ட காலம் வரை உங்களுக்குத் தங்குமிடமும் அனுபவிக்கும் பொருள்களும் உண்டு"

குரான் 7:24

உங்களுக்கு பூமியில் தங்குமிடம் இருக்கிறது; அதில் ஒரு (குறிப்பிட்ட) காலம் வரை நீங்கள் சுகம் அனுபவித்தலும் உண்டு"

குரான் 7:25

"அங்கேயே நீங்கள் வாழ்ந்திருப்பீர்கள்; அங்கேயே நீங்கள் மரணமடைவீர்கள்; (இறுதியாக) நீங்கள் அங்கிருந்தே எழுப்பப்படுவீர்கள்"

குரான் 7:10

(மனிதர்களே!) நிச்சயமாக நாம் உங்களை பூமியில் வசிக்கச் செய்தோம்; அதில் உங்களுக்கு வாழ்க்கை வசதிகளையும் ஆக்கித்தந்தோம் - எனினும் நீங்கள் நன்றி செலுத்துவதோ மிகவும் சொற்பமேயாகும்.

குரான் 20:24

ஓர் அழைப்பைக் கொண்டு உங்களை அழைத்த உடன் நீங்கள், பூமியிலிருந்து வெளிப்பட்டு வருவீர்கள்.

அறிவியல்

அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மூலம் மனிதன் இன்றளவும் ஏராளமான பொருள்செலவுகளை வாரி இறைத்து மற்ற கோள்களில் போய் வாழ்வதற்கு உண்டான பலவித முயற்சிகளை மேற்கொண்டவனா கவே இருக்கிறான் (இன்னும் முடியவில்லை). ஆனால் பூமியில் மற்றும்தான் வாழ முடியும் என்று குரான் ஆணித்தரமாக தெரிவிக்கிறது.

17. ஓரங்களில் குறையும் பூமி

குரான் 13:41

பூமியை அதன் அருகுகளிலிருந்து நாம் (படிப்படியாகக்) குறைத்து வருகிறோம் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா, மேலும், அல்லாஹ்வே தீர்ப்பளிப்பவன்; அவன் தீர்ப்பை மாற்றுபவன் எவனுமில்லை! மேலும், அவன் கேள்வி கணக்கு கேட்பதில் மிகவும் தீவிரமானவன்.

குரான் 21:44

இவர்களையும் இவர்களுடைய மூதாதையரையும், அவர்களுடைய ஆயுட்காலம் வளர்ந்தோங்கும் வரை சுகங்களை அனுபவிக்கச் செய்தோம்; நாம் (இவர்களிடமுள்ள) பூமியை அதன் அருகுகளிலிருந்து குறைத்து கொண்டு வருகிறோம் என்பதை இவர்கள் காணவில்லையா? இவர்களா மிகைத்து வெற்றிக் கொள்பவர்கள்?

அறிவியல்

நிலப்பரப்பு சிறிது சிறிதாக கடலால் விழுங்கப்பட்டு குறைந்து வருவதை சமீப காலத்தில் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

18.பூமியை தொட்டிலாக

குரான் 23:50

"(அவனே) உங்களுக்காக இப்பூமியை ஒரு விரிப்பாக அமைத்தான்;

குரான் 43:10

அவனே பூமியை உங்களுக்கு விரிப்பாக ஆக்கி, அதில் நீங்கள் (விரும்பிய இடத்திற்குச்) செல்லும் பொருட்டு வழிகளையும் ஆக்கினான்.

குரான் 78:6

நாம் இப்பூமியை விரிப்பாக ஆக்கவில்லையா?

பூமி சூரியனால் ஈர்க்கப்பட்டு சூரியனை விட்டு விலகாமல் ரங்க ராட்டினம் சுழழ்வது போல் சூரியனைச் சுற்றி வருகிறது

சூரியனுடன் ஒரு கயிற்றால் கட்டி இழுக்கப்படுவது போன்ற நிலையில் இந்த பூமி சூரியனைச் சுற்றி வருகிறது.

வினாடிக்கு 250 கிலோ மீட்டர் வேகத்தில் சூரியனை ஒரு ரங்கராட்டினம் போல் பூமி சுற்றி வந்தாலும் அதை நம்மால் உணர முடிவதில்லை. அது சுற்றுவது நமக்கு தெரிவதும் இல்லை.

பூமி வேகமாக சுழன்றாலும் அந்தச் சுழற்சி நமக்கு தெரியாது. எந்த விதமான பாதிப்பும் நமக்கு இருக்காது.

அறிவியல்

பூமியின் மேலோடு ஏழு அடுக்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது என்று அறிவியல் சொல்கிறது. இந்த அடுக்குகளின் மேற்பகுதி மேலோடு என்று அழைக்கப்படுகிறது. இந்த அடுக்கின் தடிமன் மேற்பரப்பில் இருந்து 30 கி.மீ. இது நாம் வாழும் மற்றும் நகரும் நிலை. பிறகு மென்டல் வருகிறது.

இந்த அடுக்கின் தடிமன் 2900 கிமீ வரை நீண்டுள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 900 டிகிரி செல்சியஸ் ஆகும். இந்த வெப்பநிலையில், மக்கள் தொலைவில் உள்ளனர், ஒரு சிறிய உயிரினம் கூட ஒரு நொடியில் சாம்பலாகிவிடும். சற்று யோசித்துப் பாருங்கள், இந்த பயங்கரமான அடுக்கு நாம் வாழும், நடக்கும் பூமியிலிருந்து 30 கிலோமீட்டர் ஆழத்தில் மட்டுமே அமைந்துள்ளது.

இது இரண்டாவது நிலை மட்டுமே. அடுத்த நிலை அவுட்டர் கோர் என்று அழைக்கப்படுகிறது. விக்கிபீடியாவின் படி, அதன் தடிமன் 2690 கிமீ மற்றும் இந்த மட்டத்தில் வெப்பநிலை 3600 டிகிரி செல்சியஸ் ஆகும். யோசித்துப் பாருங்கள், பூமிக்குள் இந்த நிலைகளில் என்ன நடக்கிறது? அடுத்த நிலை இன்னர் கோர் என்று அழைக்கப்படுகிறது. அது இன்னும் கொடுமை. நீங்கள் கீழே செல்ல, மிகவும் பயங்கரமான நிலைகள். நாம் பார்க்கும் எரிமலை எரிமலை இந்த அனைத்து நிலைகளிலும் ஒரு சிறிய வெடிப்பு மட்டுமே. ஆனால் நாம் இருக்கும் மட்டத்தில் உள்ள மேலோடு அடுக்கின் வெப்பநிலை மற்ற 6 நிலைகளின் வெப்பநிலையை விட 1% மட்டுமே அதிகமாக உள்ளது, இது நமது வசிப்பிடத்திற்கு ஏற்றது.

இப்போது இதனைச் சுட்டிக்காட்டி அல்லாஹ் உங்களுக்கு பூமியை படுக்கையாக ஆக்கி விட்டேன் என்று கூறினால் பூமியின் வடிவமா? இல்லவே இல்லை. நாம் வாழத் தகுந்த பூமியின் மேலோட்டத்தின் அளவை அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான் என்பது வசனத்தின் அடுத்த பாகத்திலிருந்து தெளிவாகிறது. அதன் அடுத்த பாகத்தில் 'உனக்காக ஒரு வழியை ஏற்படுத்தியிருக்கிறார்.

19. பூமிக்கு அடியில் எவ்வளவு ஆழத்திற்குச் செல்ல முடியும்?

குரான் 17:37

மேலும், நீர் பூமியில் பெருமையாய் நடக்க வேண்டாம்; (ஏனென்றால்) நிச்சயமாக நீர் பூமியைப் பிளந்துவிட முடியாது; மலையின் உச்சி(யளவு)க்கு உயர்ந்து விடவும் முடியாது.

அறிவியல்

மிக உயரமான மலை இமய மலை, அதன் உயரம் ९ கிலோ மீட்டர். விண்வெளி பயணம் போகலாம் என்று முன்னறிவிப்பு செய்யும் குரான், இந்த மலை அளவு உயரத்திற்கு சமமாக பூமிக்கு கீழே செல்வது சாத்தியமற்றது.

மூன்று கிலோ மீட்டர் ஆழத்திற்கு மேல் கீழே மனிதன் இன்னும் சென்றடையவில்லை, சென்றடைய முடியாது என்றும், மேலும் சாத்தியமற்றது என்றும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

20. நிலத்தடி நீர் எவ்வாறு சேமிக்கப்படுகிறது?

குரான் 23:18

மேலும், வானத்திலிருந்து நாம் திட்டமான அளவில் (மழை) நீரை இறக்கி, அப்பால் அதனைப் பூமியில் தங்க வைக்கிறோம்; நிச்சயமாக அதனைப் போக்கிவிடவும் நாம் சக்தியுடையோம்.

அறிவியல்

பூமியின் மேற்பரப்பில் தண்ணீர் இருப்பது போல் பூமியின் கீழ் பரப்பிலும் பெரிய ஆறுகளும் ஏராளமான தண்ணீரும் உள்ளன.

இந்த நிலத்தடி நீர் கடல் வழியாக பூமிக்கு வருவதாகத் தான் முதலில் நம்பினார்கள். உண்மையில் ஆகாயத்திலிருந்து பெய்யும் மழை ஆங்காங்கே பூமியால் உறிஞ்சப்பட்டு அந்த நீர் தான் பூமிக்கு அடியில் நிலத்தடி நீராக சேமித்து வைக்கப்பட்டுள்ளது என்று கி.பி. 1580ல் தான் கண்டறிந்தனர்.

21. மனிதர்களால் குறையும் பூமி

குரான் 50:4

(மரணத்திற்குப் பின்) அவர்களிலிருந்து (அவர்கள் உடலை) பூமி எந்த அளவு குறைத்திருக்கின்றதோ அதைத் திட்டமாக நாம் அறிந்திருக்கின்றோம்; நம்மிடம் (யாவும் பதிக்கப் பெற்று) பாதுகாக்கப்பட்ட ஏடு இருக்கிறது.

குரான் 71:17

“அல்லாஹ்வே உங்களை பூமியிலிருந்து சிறந்த முறையில் உருவாக்கினான்."

அறிவியல்

உலகில் வாழும் மனிதர்களால் பூமி குறைகிறது என்ற அறிவியல் உண்மை வெளிபட்டிருக்கிறது.

பூமியில் எவ்வளவு உயிரினங்கள் உருவானாலும் அதற்குரிய எடை வெளியிலிருந்து கிடைப்பதில்லை. பூமியுடைய எடை குறைந்துதான் அது மனிதர்களாக, மிருகங்களாக, மரங்களாக மற்ற உயிரினங்களாக உற்பத்தியாகின்றன.

இப்படியே முளைக்கிண்ட, வளருகின்ற எல்லா பொருள்களுமே தங்களுடைய எடைகளை பூமியில் இருந்து தான் எடுத்து கொள்கின்றன.

22. ஆழ் கடலில் அலை

குரான் 24:40

அல்லது (அவர்களின் நிலை) ஆழ்கடலில் (ஏற்படும்) பல இருள்களைப் போன்றதாகும்; அதனை ஓர் அலை மூடுகிறது. அதற்கு மேல் மற்றோர் அலை; அதற்கும் மேல் மேகம். (இப்படி) பல இருள்கள். சில சிலவற்றுக்கு மேல் இருக்கின்றன. (அப்பொழுது) அவன் தன் கையை வெளியே நீட்டினால் அவனால் அதைப் பார்க்க முடியாது; எவனுக்கு அல்லாஹ் ஒளியை ஏற்படுத்தவில்லையோ அவனுக்கு எந்த ஒளியுமில்லை.

அறிவியல்

கடலின் ஆழத்தில் கடுமையான அலைகளின் சுழற்சி இருப்பதை சமீபத்தில் தான் விஞ்ஞானிகள் கண்டுபிடித்து உள்ளனர்.

கடலின் மேற்பரப்பில் அலைகள் தவழ்வதை அனைவரும் அறிந்துள்ளனர். ஆனால் ஆழ்கடலுக்கு உள்ளேயும் அலைகள் உள்ளன; கடலின் ஆழத்தில் ஏற்படும் பேரலைகள் சுனாமியாக சீற்றமடைகிறது என்ற உண்மையை சுனாமிக்கு பிறகே மனிதர்கள் பரவலாக அறிந்து கொண்டனர்.

23. மலட்டுக் காற்று

குரான் 51:41-42

இன்னும், "ஆது" (சமூகத்தாரிலும் ஒரு படிப்பினை இருக்கிறது); நாம் அவர்கள் மீது (நாசம் விளைவிக்கக் கூடிய) மலட்டுக்காற்றை அனுப்பிய போது; அ(க்காற்றான)து தன் எதிரில் பட்டதையெல்லாம் தூள் தூளாக்காமல் விடவில்லை.

அறிவியல்

காற்று மனிதனுக்கு பயன்பட வேண்டுமானால் அதிக ஆக்ஸிஜன் போன்றவை இருந்தாக வேண்டும். காற்றில் உள்ளது ஆக்ஸிஜெனை பிரித்து எடுத்து விட்டால் காற்று இருந்தும் மனிதனால் உயிர் வாழ முடியாது.

காற்றை அனுப்பி ஒரு சமுதாயாத்தை எப்படி அழிக்க முடியும்? இந்த காற்று மலட்டு காற்றாக இருந்ததே காரணம்.

24. மாதங்கள் பன்னிரண்டு

குரான் 9 : 36

நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் அல்லாஹ்வுடைய (பதிவுப்) புத்தகத்தில் வானங்களையும் பூமியையும் படைத்த நாளிலிருந்தே மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டு ஆகும்.

அறிவியல்

வருடத்திற்கு பன்னிரண்டு மாதங்கள் என்பதை ஆரம்பம் முதலே மனிதன் கண்டுபிடிக்கவில்லை. பல விதமான கணக்குகளில் பல்வேறு காலகட்டங்களில் மாதங்களின் எண்ணிக்கையை மனிதன் குறிப்பிட்டு வந்தான்.

பூமி சூரியனைச் சுற்றி வருவதற்கான கால அளவு 12 மாதங்கள் என்பதை பிற்காலத்தில் தான் கண்டு பிடித்தனர். ஆனால் இவ்வசனனமோ வானங்களையும், பூமியையும் படைத்த நாள் முதல் அல்லாஹ்வின் பதிவேட்டில் 12 மாதங்கள் என அடித்துச் சொல்கிறது.

25. சூரியனும் கோள்களும் ஓடுகின்றன.

குரான் 13:2

அவனே சூரியனையும் சந்திரனையும் (தன்) அதிகாரத்திற்குள் வைத்திருக்கின்றான்; (இவை) அனைத்தும் குறிப்பிட்ட காலத்திட்டப்படியே நடந்து வருகின்றன; அவனே (எல்லாக்) காரியத்தையும் நிர்வகிக்கின்றான் - நீங்கள் உங்கள் இறைவனைச் சந்திப்பதை உறுதி கொள்ளும் பொருட்டு, அவன் (இவ்வாறு தன்) வசனங்களை விளக்குகின்றான்.

குரான் 31:29

"நிச்சயமாக அல்லாஹ்தான் இரவைப் பகலில் புகுத்துகிறான்; பகலை இரவில் புகுத்துகிறான்; இன்னும் சூரியனையும், சந்திரனையும் வசப்படுத்தினான்" என்பதை நீர் பார்க்கவில்லையா? ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட தவணைவரை செல்கின்றன; அன்றியும் நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிபவன்.

குரான் 35:13

அவனே இரவைப் பகலில் புகுத்துகிறான்; பகலை இரவில் புகுத்துகிறான், சூரியனையும் சந்திரனையும் தன் அதிகாரத்திற்குள் வைத்திருக்கின்றான்; இவை அனைத்தும் குறிப்பிட்ட காலத்திட்டப்படியே நடந்து வருகின்றன; அவனே உங்களுடைய இறைவனாகிய அல்லாஹ்; அரசாட்சியெல்லாம் அவனுக்குரியதே, அவனையன்றி நீங்கள் எவர்களை பிரார்த்தி(த்து அழை)க்கின்றீர்களோ, அவர்களுக்கு அணுவளவு அதிகாரமும் இல்லை.

குரான் 36:38

இன்னும் (அவர்களுக்கு அத்தாட்சி) சூரியன் தன் வரையரைக்குள் அது சென்று கொண்டிருக்கிறது; இது யாவரையும்

மிகைத்தோனும், யாவற்றையும் நன்கறிந்தோனுமாகிய (இறை)வன் விதித்ததாகும்.

குரான் 39:5

அவன் வானங்களையும், பூமியையும் உண்மையைக் கொண்டு படைத்திருக்கிறான்; அவனே பகலின் மீது இரவைச் சுற்றுகிறான்; இன்னும் இரவின் மீது பகலைச் சுற்றுகிறான்; சூரியனையும் சந்திரனையும் (தன் ஆதிக்கத்திற்குள்) வசப்படுத்தினான், இவை ஒவ்வொன்றும் குறிப்பிட்ட தவணைப் பிரகாரம் நடக்கின்றது; (நபியே!) அறிந்து கொள்வீராக! அவன் (யாவரையும்) மிகைத்தவன்; மிக மன்னிப்பவன்.

அறிவியல்

இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புக்குபிறகே பூமி தன்னைத் தானே சுற்றிக் கொள்கிறது,சூரியனையும் சுற்றுகிறது என்றும், தன்னைத்தானே சுற்றுவதற்கு ஒரு நாள் என்றும், சூரியனை சுற்றி முடிகின்ற காலம் ஒரு வருடம் என்றும் மனிதன் அறிந்து கொண்டான்.

பூமி இவ்வாறு சூரியனைச் சுற்றும் போது சூரியன் என்ன செய்கிறது என்றால் அது தன்னைத் தானே சுற்றிக் கொண்டு இந்தப் பூமியையும், தன் குடும்பத்தைச் சேர்ந்த மற்ற கோள்களையும் இழுத்துக் கொண்டு ஓடிக் கொண்டே இருக்கிறது.

26. கருவில் குழந்தையின் வளர்ச்சி

குரான் 23:14

பின்னர் அந்த இந்திரியத் துளியை அலக் என்ற நிலையில் ஆக்கினோம்; பின்னர் அந்த அலக்கை ஒரு தசைப் பிண்டமாக்கினோம்; பின்னர் அத்தசைப்பிண்டத்தை எலும்புகளாகவும் ஆக்கினோம்; பின்னர், அவ்வெலும்புகளுக்கு மாமிசத்தை அணிவித்தோம்; பின்னர் நாம் அதனை வேறு ஒரு படைப்பாக (மனிதனாகச்) செய்தோம். (இவ்வாறு படைத்தவனான) அல்லாஹ் பெரும் பாக்கியமுடையவன் – (படைப்பாளர்களில் எல்லாம்) மிக அழகான படைப்பாளன்.

அறிவியல்

இது ஆழமான அறிவியல் உண்மையை பேசும் சொல்லாகும். ஏனெனில் கருவில் வளர்கின்ற உயிர்கள் சுமார் மூன்று மாதங்கள் வரை அவற்றுக்கான வடிவத்தை பெறுவதில்லை வெறும் சதைப் பிண்டமாகவே வளரும். மனிதன் அல்லாத உயிரினத்தின் கருவும், மனிதனின் கருவும் இந்தக் கால கட்டத்தில் ஒரே மாதிரியாகவே அமைந்திருக்கும். மூன்று மாதங்கள் கழிந்த பிறகுதான் ஒவ்வொரு உறுப்பு எங்கெங்கே அமைய வேண்டுமோ அங்கே அதற்கான செல்கள் நகர்ந்து வடிவம் உருவாகும்.

27. கலப்பு விந்துவிலிருந்து மனிதனின் உற்பத்தி

குரான் 76:2

(பின்னர் ஆண், பெண்) கலப்பான இந்திரியத் துளியிலிருந்து நிச்சயமாக மனிதனை நாமே படைத்தோம் - அவனை நாம் சோதிப்பதற்காக அவனைக் கேட்பவனாகவும், பார்ப்பவனாகவும் ஆக்கினோம்.

ஆணிடம் இருந்து வெளிப்படும் உயிரணு, பெண்ணிடம் இருந்து வெளிப்படுகின்ற சினை முட்டையுடன் இரண்டறக் கலந்து பிறகு தான் அது பெண்ணின் கருவறைக்குச் சென்று மனிதனாக உருவாகிறது.

அறிவியல்

1875க்கு முன், குழந்தைகள் எங்கிருந்து வருகிறார்கள் என்று அறிவியலுக்கு எந்த யோசனையும் இல்லை! 1875 வரை மனிதகுலம் விந்தணு மற்றும் முட்டையின் உண்மையான கதையை கண்டுபிடிக்கவில்லை. பல நூற்றாண்டுகளாக, அறிவியல் புரட்சியின் டைட்டான்களுக்கு குழந்தைகள் எவ்வாறு உருவாக்கப்பட்டன என்பது தெரியாது.

28. ஜோடி, ஜோடிகளாக....

குரான் 36:36

பூமி முளைப்பிக்கின்ற (புற்பூண்டுகள்) எல்லாவற்றையும், (மனிதர்களாகிய) இவர்களையும், இவர்கள் அறியாதவற்றையும் ஜோடி ஜோடியாகப் படைத்தானே அவன் மிகவும் தூய்மையானவன்.

குரான் 13:3

மேலும், அவன் எத்தகையவன் என்றால் அவனே பூமியை விரித்து. அதில் உறுதியான மலைகளையும், ஆறுகளையும் உண்டாக்கினான்; இன்னும் அதில் ஒவ்வொரு கனிவர்க்கத்திலிருந்தும் இரண்டு இரண்டாக ஜோடிகளை உண்டாக்கினான்; அவனே இரவைப் பகலால் மூடுகிறான் - நிச்சயமாக இவற்றில் சிந்திக்கும் மக்களுக்குப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.

குரான் 20: 53

"(அவனே) உங்களுக்காக இப்பூமியை ஒரு விரிப்பாக அமைத்தான்; இன்னும் அதில் உங்களுக்குப் பாதைகளை இலேசாக்கினான்; மேலும் வானத்திலிருந்து நீரையும் இறக்கினான்; இம் மழை நீரைக் கொண்டு நாம் பல விதமான தாவரவர்க்கங்களை ஜோடி ஜோடியாக வெளிப்படுத்துகிறோம்"

குரான் 43:12

அவன் தான் ஜோடிகள் யாவையும் படைத்தான்; உங்களுக்காக, கப்பல்களையும், நீங்கள் சவாரி செய்யும் கால்நடைகளையும் உண்டாக்கினான்.

குரான் 51:49

நீங்கள் சிந்தித்து நல்லுணர்வு பெறுவதற்காக ஒவ்வொரு பொருளையும் ஜோடி ஜோடியாக நாம் படைத்தோம்.

அறிவியல்

தாவரங்களில் பாலினத்தின் கண்டுபிடிப்பு பொதுவாக கேமரேரியஸுக்கு (1694) வரவு வைக்கப்படுகிறது, மேலும் கோயல்ரூட்டர் (1761) தாவர கலப்பினங்கள் பற்றிய முதல் முறையாக ஆய்வு செய்ததாக பொதுவாக நம்பப்படுகிறது.

தாவரங்களிலும் ஆண், பெண் உள்ளன என்பது தற்கால கண்டுபிடிப்பாகும்.

மேலும் ஜோடிகலைப் பற்றி குறிப்பிடும் சில வசனங்களில் **"இவர்கள் அறியாமல் இருப்பவற்றிலிருந்தும் ஜோடிக்கலைப் படைத்திருப்பதாக'** இறைவன் கூறுகிறான்.

அன்றைய மனிதன் அறியாமல் இருந்த பல ஜோடிகளை இன்றைக்கு மனிதன் கண்டு பிடித்திருக்கின்றான்.

மின்சாரத்தில் **பாசிட்டிவ், நெகடிவ்** என்ற ஜோடிகள் இருக்கின்றன.

அதே போல் அணுவில் கூட ஒவ்வொரு அணுவிலும் **புரோட்டான், எலக்ட்ரான்** என்ற ஜோடிகள் இருக்கின்றன.

29. விந்தின் பிறப்பிடம்

குரான் 86:5-7

மனிதன் எதிலிருந்து படைக்கப்பட்டான் என்பதை கவனிக்கட்டும்.

குதித்து வெளிப்படும் (ஒரு துளி) நீரினால் படைக்கப்பட்டான். முதுகந் தண்டிற்கும், விலா எலும்புகளுக்கும் இடையிலிருந்து அது வெளியாகிறது.

அறிவியல்

சமீப காலத்திற்கு முன்பு வரை மனிதனின் விதைப் பையிலிருந்து தான் விந்து வெளிப்படுகிறது என்று நம்பி வந்தனர்.

ஆனால் விதைப் பையில் இருந்து விந்து உற்பத்தியானாலும் அது மேலேறிச் சென்று முதுகந் தண்டிற்கும் முன் பகுதிக்கும் இடையே உள்ள ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைந்து அங்கிருந்து தான் வேகமாக தள்ளப்படுகிறது என்பதை சமீப காலத்தில் தான் கண்டு பிடித்தனர்.

30. கர்ப்ப அறையின் தனித் தன்மை

குரான் 13:8

ஒவ்வொரு பெண்ணும் (கர்ப்பத்தில்) சுமந்து கொண்டிருப்பதையும், கர்ப்பப்பைகள் சுருங்கி குறைவதையும், அவை விரிந்து அதிகரிப்பதையும் அல்லாஹ் நன்கறிவான்; ஒவ்வொரு பொருளுக்கும் அவனிடம் அளவு இருக்கின்றது.

பொதுவாக மனித உடலுக்கு என்று சில தனித்தன்மைகள் இருக்கின்றன

பெண்ணின் கருவறை அந்நிய உயிரைத் தனக்குள் ஏற்றுக் கொள்கிறது. கருவை பல மாதங்கள் வளர்த்து தீடீரெண்டு அதை வெளியேற்றுவதற்கு முயற்சிக்கிறது. இவ்வாறு முயற்சிக்கும் போது கருவறை சுருங்கி, விரிகிறது. இதன் காரணமாகவே பிரசவ வேதனை ஏற்படுகின்றது.

"ஒவ்வொரு பொருளும் குறிப்பிட்ட கால நிர்ணயப்படியே அவனிடத்தில் உள்ளன" என்ற சொற்றோடர் முக்கியமாக கவனிக்கப் பட வேண்டியதாகும். இயற்கைக்கு மாறாக அந்நியப் பொருளை ஏற்றுக் கொண்டிருந்த கருவறை ஒரு குறிப்பிட்ட நேரம் வந்ததும் வெளியேற்றுவதற்கு இன்று வரை காரணம் கண்டு பிடிக்கப்படவில்லை.

31. விரல் ரேகையின் முக்கியத்துவம்

குரான் 75:4

அன்று; அவன் நுனி விரல்களையும் (முன்னிருந்தவாறே) செவ்வையாக்க நாம் ஆற்றலுடையோம்.

விரல் நுனிகளைக் குறிப்பிட்டு கூறக் காரணம், மனிதனின் எந்த அங்கமாக இருந்தாலும் அந்த அங்கம் குறிப்பிட்ட மனிதனுடையது தான் என்று அடித்துச் சொல்ல முடியாது. ஏனென்றால் அது போல பலரது அங்கங்கள் அமைந்திருக்கும்.

ஒரு மனிதனிடமிருந்து இன்னொரு மனிதன் முழுமையாக வேறுபடுவது விரல்களில் அமைந்திருக்கும் ரேகைகலால் தான்.

அறிவியல்

கைரேகைகளுக்குப் பின்னால் உள்ள அறிவியல் எந்த இரண்டு நபர்களுக்கும் ஒரே மாதிரியான கைரேகைகள் இல்லை, ஒரே மாதிரியான இரட்டையர்களுக்கு கூட இல்லை. நாம் வயதாகிவிட்டாலும் கைரேகைகள் மாறுவதில்லை.

32. பால் எவ்வாறு உற்பத்தியாகிறது?

குரான் 16:66

நிச்சயமாக உங்களுக்கு (ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற) கால்நடைகளிலும் (தக்க) படிப்பினை இருக்கின்றது; அவற்றின் வயிற்றிலுள்ள சாணத்திற்கும், இரத்தத்திற்கும் இடையிலிருந்து கலப்பற்ற பாலை அருந்துபவர்களுக்கு இனிமையானதாக (தாராளமாகப்) புகட்டுகிறோம்.

அறிவியல்

அரைக்கப்பட்ட உணவு கூழுக்கும், இரத்தமாக மாறுகின்ற நிலைக்கும் இடைப்பட்ட பொருளில் இருந்து தான் பால் உற்பத்தியாகிறது என்பதே விஞ்ஞானிகளின் கூற்று.

33. தேன் எவ்வாறு உற்பத்தியாகிறது?

குரான் 16:68,69

உம் இறைவன் தேனீக்கு அதன் உள்ளுணர்வை அளித்தான். "நீ மலைகளிலும், மரங்களிலும், உயர்ந்த கட்டடங்களிலும் கூடுகளை அமைத்துக்கொள் (என்றும்).

"பின், நீ எல்லாவிதமான கனிகளின் மலர்களிலிருந்தும் உணவருந்தி உன் இறைவன் (காட்டித் தரும்) எளிதான வழிகளில் (உன் கூட்டுக்குள்) ஒடுங்கிச் செல்" (என்றும் உள்ளுணர்ச்சி உண்டாக்கினான்). அதன் வயிற்றிலிருந்து பலவித நிறங்களையுடைய ஒரு பானம் (தேன்) வெளியாகிறது; அதில் மனிதர்களுக்கு (பிணி தீர்க்க வல்ல) சிகிச்சை உண்டு; நிச்சயமாக இதிலும் சிந்தித்துணரும் மக்களுக்கு ஓர் அத்தாட்சி இருக்கிறது.

அறிவியல்

பெரும்பாலான மக்கள் இன்று கூட தேன் எப்படி உற்பத்தியகிறது என்பதை அறிந்திருக்கவில்லை. தேனீக்கள் மலர்களிலிருந்து தேனை உறிஞ்சி வந்து கூடுகளில் சேமித்து வைக்கின்றன என்று தவறாக விளங்கி வைத்திருக்கின்றனர்.

உண்மை என்னவென்றால் மலர்களிலும் கனிகளிலும் உள்ள குளுக்கோசை தேனீக்கள் உணவாக உட்கொள்ளுகின்றன. உட்கொண்ட பிறகு அவற்றின் வயிற்றுக்குள் சென்ற பொருள் மாற்றமடைந்து அதன் வயிற்றிலிருந்து வெளிப்படும் ஒரு கழிவு தான் தேன்.

இதை இன்றைய விஞ்ஞானிகள் நிரூபித்திருக்கின்றன.

34. நவீன வாகனங்கள் பற்றிய முன்னறிவிப்பு

குரான் 16:5-8

கால் நடைகளையும் அவனே படைத்தான்; அவற்றில் உங்களுக்குக் கத கதப்பு(ள்ள ஆடையனிகளு)ம் இன்னும் (பல) பலன்களும் இருக்கின்றன; அவற்றிலிருந்து நீங்கள் புசிக்கவும் செய்கிறீர்கள்.அவற்றை நீங்கள் மாலை நேரத்தில் (வீட்டுக்குத்) திரும்பி ஓட்டி வரும் போதும், காலை நேரத்தில் (மேய்ச்சலுக்காக) அவிழ்த்துவிடும் போதும், அவற்றில் உங்களுக்கு(ப் பொலிவும்) அழகுமிருக்கிறது.

மேலும், மிக்க கஷ்டத்துடனன்றி நீங்கள் சென்றடைய முடியாத ஊர்களுக்கு அவை உங்களுடைய சுமைகளைச் சுமந்து செல்கின்றன. நிச்சயமாக உங்களுடைய இறைவன் மிக இரக்கமுடையவன்; அன்பு மிக்கவன். இன்னும், குதிரைகள், கோவேறு கழுதைகள், கழுதைகள் ஆகியவற்றை நீங்கள் ஏறிச்செல்வதற்காகவும், அலங்காரமாகவும், (அவனே படைத்துள்ளான்;) **இன்னும், நீங்கள் அறியாதவற்றையும் அவன் படைக்கிறான்**.

மனிதர்கள் அன்றைக்கு பயன்படுத்தி வந்த குதிரை, கோவேறு கழுதை, கழுதை ஆகிய வாகனங்களைக் குறிப்பிட்டு விட்டு, **"நீங்கள் அறியாதவற்றை இனி படைப்பான் "** என்று இவ்வசனங்களில் குறிப்பிடுகிறது.

அறிவியல்

நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களின் காலத்திற்குப் பிறகு எத்தனையோ விதமான வாகனங்கள் படைக்கப்பட்டதை, இன்னும் படைக்கப்படவிருப்பதை முன் கூட்டியே அறிவிப்பதாக இது அமைந்துள்ளது.

35. பெருங்கவலை போக்கும் அருமருந்து

குரான் 3:153-154

(நினைவு கூறுங்கள்! உஹது களத்தில்) உங்கள் பின்னால் இருந்து இறைதூதர் உங்களை அழைத்துக் கொண்டிருக்க, நீங்கள் எவரையும் திரும்பிப் பார்க்காமல் மேட்டின்மேல் ஏறிக் கொள்ள ஓடிக் கொண்டிருந்தீர்கள்; ஆகவே (இவ்வாறு இறை தூதருக்கு நீங்கள் கொடுத்த துக்கத்தின்) பலனாக இறைவன் துக்கத்தின்மேல் துக்கத்தை உங்களுக்குக் கொடுத்தான்; ஏனெனில் உங்களுக்குக் கிடைக்க வேண்டியது தவறி விட்டாலோ, உங்களுக்குச் சோதனைகள் ஏற்பட்டாலோ நீங்கள் (சோர்வும்) கவலையும் அடையாது (பொறுமையுடன் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்); இன்னும், அல்லாஹ் நீங்கள் செய்வதை நன்கு அறிபவனாக இருக்கின்றான்.

பிறகு, அத்துக்கத்திற்குப்பின் அவன் உங்களுக்கு அமைதி அளிப்பதற்காக நித்திரையை இறக்கி வைத்தான்; உங்களில் ஒரு பிரிவினரை அந்நித்திரை சூழ்ந்து கொண்டது;

உஹது போரில் வெற்றி நழுவிப் போனதுடன் உயிரிழப்புகளும் காயங்களும் முஸ்லிம்களுக்கு அதிக அளவில் ஏற்பட்டன.

இதனால் முஸ்லிம்கள் மனச சோர்வு அடைந்து தளர்ந்து போயிருந்த நேரத்தில் அதைவிட பெருங் கவலையாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொல்லப்பட்டார்கள் என்ற வதந்தி அமைந்தது.

முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட அந்தக் கவலைகள் இதனால் மறைந்தன. நபிகள் நாயகள் கொல்லப்பட்டு விட்டார்களோ என்ற ஒரே கவலை தான் அப்போது இருந்தது.

அந்தக் கவலையைப் போக்கும் விதமாக நபிகள் (ஸல்) அவர்கள் உயிருடன் உள்ள செய்தி கிடைத்த உடன் நபித் தோழர்கள்

பெரும் உத்வேகம் பெற்றனர். மீண்டும் வெற்றி வாகை சூடினார்கள். தூக்கத்தை கொடுத்தது மேலும் பயன் தந்ததாக குரான் கூறுகிறது. மனோதத்துவ ரீதியாக இது போன்ற நடவடிக்கைகளால் தான் கவலையை மறக்கடிக்கச் செய்ய இயலும் என்று இன்று கண்டறியப் பட்டுள்ளது.

அறிவியல்

மனக் கவலையில் ஆழ்ந்திருபவர்களையும், மன நோய்க்கு ஆளானவர்களையும் குணப்படுத்த அதை விடப் பெரும் கவலையை அவர்களுக்கு கற்பனையாக ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு பெரும் கவலையை ஏற்படுத்தியவுடன் ஏற்கனவே இருந்த சிறிய கவலைகள் மறைந்து விடும். பெரும் கவலை மட்டுமே முழு உள்ளதையும் ஆக்கிரமித்துக் கொள்ளும். கற்பனையாக ஏற்படுத்திய கவலையை கற்பனை எனப் புரிய வைத்தால் அனைத்துக் கவலைகளிலிருந்தும் அவர் விடுபடுவார்.

மனோதத்துவ நிபுணர்கள் கையாளும் இந்த வழி முறையைக் காரண காரியத்துடன் குரான் விளக்குகிறது தூக்கத்தை கொடுத்தது மேலும் பயன் தந்ததாக இதை தொடர்ந்து குரான் கூறுகிறது. பெரும் கவலையை ஏற்படுத்தி, தூக்கத்தையும் ஏற்படுத்தி பெரும் கவலையை நீக்கினால் எல்லா விதமான கவலைகளும்பறந்து போய் விடும்.

20ம் நூற்றாண்டில் மிகப்பெரிய ஆய்வுகளுக்கு பின் கண்டறியப்பட்ட இந்த வழி முறையை 14ம் நூற்றாண்டிலேயே குரான் கூறுகிறது.

36. வேதனையை உணரக்கூடிய நரம்புகள்

குரான் 4:56

யார் நம் வேதவசனங்களை நிராகரிக்கிறார்களோ, அவர்களை நாம் நிச்சயமாக நரகத்தில் புகுத்தி விடுவோம்; அவர்கள் தோல்கள் கருகிவிடும் போதெல்லாம் அவையல்லா (வேறு) தோல்களை, அவர்கள் வேதனையைப் (பூரணமாக) அனுபவிப்பதற்கென, அவர்களுக்கு நாம் மாற்றிக் கொண்டே இருப்போம் - நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவனாகவும் ஞானமுள்ளவனாகவும் இருக்கின்றான்.

மரணத்திற்கு பின் (மறுமை நாள் எனும்) நியாயத் தீர்ப்பு நாளில் இறை வசனங்களை இவுலகில் மறுத்து (மறந்து) வாழும் தீயவர்கள் நரக நெருப்பினால் வேதனை செய்யப்படுவார்கள் என்று குரான் கூறுகிறது. இதை கூறும்போது நரகவாசிகளின் தோல்கள் கருகும் போதெல்லாம் உடனே வேறு தோல்கள் (வலியை தொடர்ந்து உணர்வாதற்காக) மாற்றுவோம் என்று இறைவன் கூறுகிறான்.

அறிவியல்

வேதனையை உணரக்கூடிய நரம்புகள் மனிதனின் தோலில் தான் உள்ளன. தோல் எரிந்து விட்டால் எந்த வேதனையையும் மூளை உணராது என்பது சமீபத்திய கண்டு பிடிப்பு. இதனால் தான் மேல் தோல் மரத்துப் போகச் செய்யும் ஊசிகளைப் போட்டு அறுவை சிகிச்சை செய்கின்றனர்.

37. பாதுகாக்கப்படும் திருக்குர்ஆன்

குரான் 15:9

நிச்சயமாக நாம் தான் (நினைவூட்டும்) இவ்வேதத்தை (உம்மீது) இறக்கி வைத்தோம்; நிச்சயமாக நாமே அதன் பாதுகாவலனாகவும் இருக்கின்றோம்.

குரான் அருளப்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்களும், அதை ஏற்றுக்கொண்ட மக்களும் பெரும்பாலும் படிப்பறிவற்றவர்களாக இருந்தனர். மேலும், அந்த காலத்தில் எழுதி வைத்துக் கொள்ளக் கூடிய சாதனங்களாக மரப்பட்டைகளும், தோல்காளுமே பயன்பட்டன.

இத்தகைய கால கட்டத்தில் 23 வருடங்களில் சிறிது அருளப்பட்ட குரான் 1400 வருடங்கள் கடந்து விட்ட பிறகும் இன்றளவும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. எவ்வித மாறுதலுக்கும் இடம் தராமல் அருளப்பட்ட மூல மொழியிலேயே இவ்வேதம் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

அறிவியல்

இது 1400 ஆண்டுகளுக்கு முன்பு வெளிப்படுத்தப்பட்ட அதன் தூய்மையான வடிவத்தில் அதன் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துகிறது.

38. பாதுகாக்கப்பட்ட பிர்அவ்ன் உடல்

குரான் 10 : 90-92

மேலும், இஸ்ராயீலின் சந்ததியினரை நாம் கடலைக் கடக்க வைத்தோம்; அப்போது, ஃபிர்அவ்னும், அவனுடைய படைகளும், (அளவு கடந்து) கொடுமையும், பகைமையும் கொண்டு அவர்களைப் பின் தொடர்ந்தார்கள்; (அவனை மூழ்கடிக்க வேண்டிய நேரம் நெருங்கி) அவன் மூழ்க ஆரம்பித்ததும் அவன்| இஸ்ராயீலின் சந்ததியினர் எந்த நாயன் மீது ஈமான் கொண்டுள்ளார்களோ, அவனைத் தவிர வேறு இறைவன் இல்லையென்று நானும் ஈமான் கொள்கிறேன்; இன்னும் நான் அவனுக்கே முற்றும் வழிபடுபவர்களில் (முஸ்லிம்களில்) ஒருவனாக இருக்கின்றேன்" என்று கூறினான்.

"இந்த நேரத்தில் தானா (நீ நம்புகிறாய்)? சற்று முன் வரையில் திடனாக நீ மாறு செய்து கொண்டிருந்தாய்; இன்னும், குழப்பம் செய்பவர்களில் ஒருவனாகவும் இருந்தாய். எனினும் உனக்குப் பின்னுள்ளவர்களுக்கு ஓர் அத்தாட்சியாக இன்றைய தினம் நாம் உம் உடலைப் பாதுகாப்போம்; நிச்சயமாக மக்களில் பெரும்பாலோர் நம் அத்தாட்சிகளைப்பற்றி அலட்சியமாக இருக்கின்றார்கள்" (என்று அவனிடம் கூறப்பட்டது).

அறிவியல்

அன்று மூழ்கடிக்கப்பட்ட உடல், எந்தக் காலத்தில் அதை வெளிப்படுத்தினால் மனிதர்கள் அதைப் பாதுகாத்துக் கொள்வார்களோ அந்தக் காலத்தில் அதாவது 1898ல் அவனது (பிர்அவ்ன்) உடல் பனிப்பாறைகளுக்கு இடையே கண்டு பிடிக்கப்பட்டு எகிப்தின் தலைநகரம் கெய்ரோவில் உள்ள அருங்காட்சியகத்தில் பாதுக்காக்கப்பட்டு வருகிறது. இந்த உடலின் வயதை அறிய கார்பன் சோதனை உள்ளிட்ட அனைத்து சோதனைகளும் செய்து **"இது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய உடல்"** என்பதை உறுதிபடுத்தியுள்ளார்கள்.

39. நூஹ் நபியின் கப்பல்

குரான் 29 : 14

மேலும்| திடனாக நாம் நூஹை அவருடைய சமூகத்தாரிடம் அனுப்பினோம்; ஆக, அவர்கள் மத்தியில் அவர் ஐம்பது குறைய ஆயிரம் ஆண்டுகள் தங்கியிருந்தார்; ஆனால் அவர்கள் அநியாயக்காரர்களாக இருந்தமையால் அவர்களைப் பிரளயம் பிடித்துக் கொண்டது.

குரான் 54 : 11-17

ஆகவே, நாம் கொட்டும் மழையைக் கொண்டு வானங்களின் வாயில்களைத் திறந்து விட்டோம். மேலும், பூமியின் ஊற்றுகளை பொங்க வைத்தோம்; இவ்வாறாக, குறிப்பிட்ட ஓர் அளவின் படி (இரு வகை) நீரும் கலந்து பெருக் கெடுத்)தது. அப்போது, பலகைகளினாலும் ஆணிகளினாலும் செய்யப்பட்ட மரக்கலத்தின் மீது அவரை ஏற்றிக் கொண்டோம். எனவே, எவர் (அவர்களால்) நிராகரிக்கப்பட்டுக் கொண்டிருந்தாரோ, அவருக்கு (நற்) கூலி கொடுப்பதாக, (அம்மரக்கலம்) நம் கண் முன்னிலையில் மிதந்து சென்று கொண்டிருந்தது. நிச்சயமாக நாம் (வருங்காலத்திற்கு இம் மரக்கலத்)தை ஓர் அத்தாட்சியாக விட்டு வைத்தோம்; (இதன் மூலமாக) நல்லுணர்வு பெறுவோர் உண்டா? ஆகவே, என் (கட்டளையினால் ஏற்பட்ட) வேதனையும், எச்சரிக்கையும் எப்படி இருந்தன? (என்பதை கவனிக்க வேண்டாமா?) நிச்சயமாக, இக் குர்ஆனை நன்கு நினைவு படுத்திக் கொள்ளும் பொருட்டே எளிதாக்கி வைத்திருக்கின்றோம். எனவே (இதிலிருந்து) நல்லுணர்வு பெறுவோர் உண்டா?

அறிவியல்

மலை போன்ற உயரத்திற்கு வெள்ளம் வந்ததால் ஜூதி மலைக்கு மேல் கப்பல் நிலை கொண்டது இம்மலை துருக்கி நாட்டின் எல்லையில் அமைந்துள்ளது.

இதன் உயரம் 16 ஆயிரம் அடியாகும். துருக்கி நாட்டின் அராராத் மலை (ஜூதி மலை) மீது பணிகளுக்கிடையில் கப்பல் ஒன்று புதைந்து கிடைப்பை அமெரிக்கா ஆய்வாளர்கள் கண்டு பிடித்தனர்.

இவ்வளவு பெரிய கப்பல் மலையின் மீது அமர வேண்டுமானால் அந்த அளவுக்கு பெருவெள்ளம் ஏற்பட்டால்தான் சாத்தியம். இந்த கப்பலை அத்தாட்சியாக விட்டு வைத்தோம் என்று இறைவன் கூறுகிறான்.

40. பெரிய நெருக்கடி கோட்பாடு

குரான் 21:104

எழுதப்பட்ட ஏடுகளைச் சுருட்டுவதைப் போல் வானத்தை நாம் சுருட்டிவிடும் அந்நாளை (நபியே! நினைவூட்டுவீராக!); முதலில் படைப்புகளைப் படைத்தது போன்றே, (அந்நாளில்) அதனை மீட்டுவோம்; இது நம் மீது வாக்குறுதியாகும்; நிச்சயமக நாம் இதனை செய்வோம்.

அறிவியல்

பிரபஞ்சம் மீண்டும் கருந்துளைகளுக்குள் இழுக்கப்பட்டு மீண்டும் ஒரு சிறிய வெகுஜனத்தை எவ்வாறு உருவாக்குகிறது என்பதைப் பற்றி பேசும் பிக் க்ரஞ்ச் கோட்பாட்டுடன் இது பொருந்துகிறது. உண்மையில், பிரபஞ்சம் முடிவடையும் விஞ்ஞானிகளால் கணிக்கப்பட்ட காட்சிகளில் பிக் க்ரஞ்ச் ஒன்றாகும். பலரைப் போலவே, இது ஐன்ஸ்டீனின் பொது சார்பியல் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. அதாவது, பெருவெடிப்பு எவ்வாறு பிரபஞ்சம் மிகவும் சாத்தியமாகத் தொடங்கியது என்பதை விவரித்தால், அந்த தொடக்கத்தின் விளைவாக அது எவ்வாறு முடிவடையும் என்பதை பிக் க்ரஞ்ச் விவரிக்கிறது.

41. முன் நெற்றி

குரான் 95:15-16

அப்படியல்ல/அவன்1 விலகிக் கொள்ளவில்லையானால், நிச்சயமாக நாம் (அவனுடைய) முன்னெற்றி ரோமத்தைப் பிடித்து அவனை இழுப்போம். தவறிழைத்து பொய்யுரைக்கும் முன்னெற்றி ரோமத்தை.

அறிவியல்

'அனாடமி மற்றும் பிசியாலஜியின் எசென்ஷியல்ஸ்' என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தின்படி, மூளையின் நெற்றி அல்லது முன் பகுதியானது உந்துதலுக்கும், இயக்கங்களைத் திட்டமிடுவதற்கும் தொடங்குவதற்குமான தொலைநோக்குப் பார்வைக்கும் பொறுப்பு என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இவை அனைத்தும் மூளையின் முன்பகுதியில் நடைபெறுகின்றன. இயக்கம் மற்றும் திட்டமிடலுக்கு பொறுப்பான மூளையின் பகுதி அவர் நிறுத்தாவிட்டால் கைப்பற்றப்படும் என்று கூறப்படுகிறது. மற்ற ஆய்வுகள் பொய்யின் செயல்பாட்டிற்கு இந்த முன்னோடி பகுதியே காரணம் என்பதை நிரூபித்துள்ளது.

42. முரண்பாடு

குரான் 4:82

அவர்கள் இந்த குர்ஆனை (கவனமாக) சிந்திக்க வேண்டாமா, (இது) அல்லாஹ் அல்லாத பிறரிடமிருந்து வந்திருந்தால், இதில் ஏராளமான முரண்பாடுகளை அவர்கள் கண்டிருப்பார்கள்.

அறிவியல்

இன்றுவரை (கடந்த 1450 ஆண்டுகளாக) இது நிரூபிக்கப்பட்ட அறிவியல் கோட்பாடுகளுடன் இணைந்துள்ளது. முரண்பாடு இல்லை.

43. தரவு மீட்பு

குரான் 18:49

இன்னும் (பட்டோலையாகிய) புத்தகம் (அவர்கள் முன்) வைக்கப்படும்; அதிலுள்ளதைக் கண்டு குற்றவாளிகள் மிக்க அச்சத்துடன் இருப்பதைக் காண்பீர்; மேலும் அவர்கள், "எங்கள் கேடே! இந்த ஏட்டிற்கு என்ன (நேர்ந்தது)? சிறியவையோ பெரியவையோ எதையும் வரையறுக்காது இது விட்டுவைக்கவில்லையே!" என்று கூறுவார்கள்; இன்னும், அவர்கள்செய்த யாவும் அவர்கள் முன் வைக்கப்படுவதைக் காண்பார்கள்; ஆனால் உம்முடைய இறைவன் ஒருவருக்கும் அநியாயம் செய்யமாட்டான்.

அறிவியல்

"தரவு மீட்டெடுப்பு" என்பது பல்வேறு ஆதாரங்களில் இருந்து தகவல்களை அணுகுதல் மற்றும் பிரித்தெடுக்கும் செயல்முறையைக் குறிக்கிறது. தொழில்நுட்ப ரீதியாக மனிதன் கடந்த நூற்றாண்டில்தான் "தரவு மீட்டெடுப்பு" (கடைசி தசமம் வரை) பற்றி அறிந்தான்.

44. மேகங்களின் உருவாக்கம்

குர்ஆன் 24:43

(நபியே!) நீர் பார்க்கவில்லையா? நிச்சயமாக அல்லாஹ் மேகத்தை மெதுவாக இழுத்து, பின்னர் அவற்றை ஒன்றாக இணையச்செய்து, அதன் பின் அதை (ஒன்றின் மீது ஒன்று சேர்த்து) அடர்த்தியாக்குகிறான்; அப்பால் அதன் நடுவேயிருந்து மழை வெளியாவதைப் பார்க்கிறீர்;

அறிவியல்

உண்மையில், சிறிய மேகங்கள் காற்றினால் தள்ளப்படுகின்றன (மெதுவாக நகர்த்தப்படுகின்றன), மேலும் ஒன்றுடன் ஒன்று ஒன்றிணைகின்றன. இந்த கட்டத்தில், ஒரு செங்குத்து மேம்பாடு ஏற்படுகிறது மற்றும் மேகத்தின் மேல் பகுதி வானத்தில் விரிவடைகிறது. இதன் விளைவாக, மேகத்தின் வெவ்வேறு பகுதிகள் வேறுபட்ட புள்ளிகளுக்கு உயர்த்தப்பட்டு, பல மேகங்கள் ஒன்றன் மேல் ஒன்றாகக் குவிந்து கிடப்பது போல் (ஸ்டாக்கிங்) இருக்கும். இந்த ஆய்வு கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் மட்டுமே நடந்திருக்கிறது.

45. எறும்புகளுக்கு இடையேயான தொடர்பு அமைப்பு

குர்ஆன் 27:18

இறுதியாக, எறும்புகள் நிறைந்த இடத்திற்கு அவர்கள் வந்த போது ஓர் எறும்பு (மற்ற எறும்புகளை நோக்கி) "எறும்புகளே! நீங்கள் உங்கள் புற்றுகளுக்குள் நுழைந்து கொள்ளுங்கள்; ஸுலைமானும் அவருடைய சேனைகளும், அவர்கள் அறியாதிருக்கும் நிலையில் உங்களை நசுக்கி விடாதிருக்கும் பொருட்டு (அவ்வாறு செய்யுங்கள்)" என்று கூறிற்று.

அறிவியல்

முன்பெல்லாம் இது ஒரு விசித்திரக் கதை என்று கேலி செய்தார்கள். . இருப்பினும், எறும்புகளின் வாழ்க்கை முறை பற்றிய பல புதிரான உண்மைகளை அறிவியல் ஆராய்ச்சி வெளிப்படுத்தியுள்ளது, அவை மனிதனால் முன்னர் அறியப்படவில்லை மற்றும் அவை பல அம்சங்களில் மனித நடத்தைகளைப் பின்பற்றுகின்றன என்பதையும் காட்டுகிறது.

உதாரணமாக, எறும்புகள் தங்களுள் இறந்தவர்களை மனிதர்களைப் போல புதைக்கும் பழக்கமுண்டு. மேலும் அவை மிகவும் நுட்பமான உழைப்பு முறையைக் கொண்டுள்ளன, அதில் அவை தற்கால வழமை போல தங்களுக்குள் மேலாளர்கள், மேற்பார்வையாளர்கள், ஃபோர்மேன் மற்றும் தொழிலாளர்கள் எனப் பிரிக்கப்பட்டு வேலை செய்கின்றன. இன்னும் சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், அவர்களுக்குள் பொருட்களை ஏலம் எடுத்து பரிமாறிக்கொள்ளும் சந்தை உள்ளது மனிதர்களின் நடத்தைகள்ப் போல, கோடைக்காலத்தில் உணவுப்பொருட்களை சேமித்து குளிர்காலத்தில் தங்களுக்குள் உணவளித்துக் கொள்ள கிடங்குகளுக்கு எடுத்துச் செல்வதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

46. கருவின் பாலினத்தை ஆண் தீர்மானிக்கிறார்

குரான் 75:37

(கர்ப்பக் கோளறைக்குள்) சொட்டுச் சொட்டாய் ஊற்றப்படும் இந்திரியத்துளியாக அவன் இருக்கவில்லையா?

அறிவியல்

பாரம்பரியமாக, மற்றும் நீண்ட காலமாக, புதிதாகப் பிறக்கும் குழந்தையின் பாலினத்தை நிர்ணயிப்பது பெண்களே என்று கருதப்பட்டது.

ஆனால், பாலின நிர்ணயம் விந்தணுக்களின் வகையுடன் தொடர்புடையது என்பதை அறிவியல் வெளிப்படுத்தியது. ஒவ்வொரு மனிதனின் டிஎன்ஏவில் 46 குரோமோசோம்கள் உள்ளன, அவை அவனது உடல் அம்சங்களை வடிவமைக்கின்றன. அனைத்து கருமுட்டைகளும் ஒரு பொதுவான குரோமோசோம் x ஐ கொண்டு செல்லும் போது, சில விந்தணுக்கள் குரோமோசோம் X மற்றும் Y குரோமோசோமை கொண்டு செல்கின்றன.

கருத்தரித்தலின் போது, X குரோமோசோம் கொண்ட விந்தணு கருமுட்டையில் செறிவூட்டப்பட்டால், கரு பெண்ணாக (xx) வளரும். ஆனால் விந்தணு Y குரோமோசோமாக இருந்தால்ஆணாக வளரும்.

கருத்தரித்தல் என்ற சிக்கலான செயல்முறையை குர்ஆன் எளிமையான வார்த்தையில் 1450 ஆண்டுகளுக்கு முன்பே குறிப்பிட்டுள்ளது.

47. பறவைகளின் பறக்கும் படலம்

குரான் 16:79

வான(மண்டல)த்தின் (காற்று) வெளியில் (இறை கட்டளைக்குக்) கட்டுப்பட்டு பறக்கும் பறவைகளை இவர்கள் பார்க்கவில்லையா? அவற்றை (ஆகாயத்தில்) தாங்கி நிற்பவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவருமில்லை; நிச்சயமாக இதில் ஈமான் கொண்ட மக்களுக்கு(த் தக்க) அத்தாட்சிகள் இருக்கின்றன.

அறிவியல்

எந்த வித முன் அனுபவம் இல்லாமல் கூட இளம் பறவைகள் நீண்ட தூரம் பயணித்து, ஒவ்வொரு அசைவையும் முன்னரே அறிந்திருப்பது போல் கிளம்பிய இடத்திற்கே திரும்பி வருகிறது என்பது திகைப்பூட்டும் விஷயம்.

விஞ்ஞானிகள் பறவைகளின் பறப்பை ஆராய்ச்சி செய்தபோது, பறவைகளின் மரபணு குறியீட்டில் உட்பொதிக்கப்பட்ட ஒரு இடம்பெயர்வு திட்டத்தை கண்டுபிடித்தனர், இது இளம் பறவைகள் எவ்வாறு நீண்ட தூரம் பயணிக்க முடிகிறது மற்றும் எந்த வழிகாட்டுதலும் இல்லாமல் புறப்படும் இடத்திற்குத் திரும்புகிறது என்பதை விளக்குகிறது.

48. ஒளியின் வேகம்

குரான் 32:5

வானத்திலிருந்து பூமி வரையிலுமுள்ள காரியத்தை அவனே ஒழுங்குபடுத்துகிறான்; ஒரு நாள் (ஒவ்வொரு காரியமும்) அவனிடமே மேலேறிச் செல்லும், அந்த (நாளின்) அளவு நீங்கள் கணக்கிடக்கூடிய ஆயிரம் ஆண்டுகளாகும்.

அறிவியல்

மேலே உள்ள வசனத்திலிருந்து விவகாரம் அல்லது தெய்வீக ஒழுங்கு ஒரு நாளில் கடவுளை அடையும், அதன் தூரம் அல்லது நீளம் ஆயிரம் சந்திர ஆண்டுகளுக்கு சமம்.

[கடந்த காலத்தில் மக்கள் தூரத்தை அளக்கப் நேரத்தை பயன்படுத்தினார்கள் உதாரணத்திற்கு, கிராமம் 2 நாட்கள் தூரத்தில் உள்ளது என்று யாரேனும் சொன்னால் நடை வேகத்தில். ஆனால் இங்கு அல்லாஹ் சந்திரனின் வேகத்தால் 1000 ஆண்டுகள் என்று கூறுகிறான் .அல்லாஹ் முஸ்லிம்களின் கணக்கின் மூலம் கூறுகிறான், இஸ்லாம் சந்திர நாட்காட்டியைப் பயன்படுத்துவதால் நமது கணக்கீடு சந்திரனால் (சந்திரன்) ஆகும்.]

எனவே மேலே உள்ள வசனத்திலிருந்து 1000 ஆண்டுகள் மற்றும் நேரம் 1 நாள் ஆகியவற்றைப் பெறுகிறோம்.

இஸ்லாம் சந்திர நாட்காட்டியைப் பயன்படுத்துவதால் 1000 ஆண்டுகளில் சந்திரன் எவ்வளவு கிலோமீட்டர் பயணிக்கிறது என்பதைப் பார்ப்போம்.

சந்திரனின் சராசரி வேகம் = 1.022794272 கி.மீ/செ

சூரிய மைய ஈர்ப்பு விளைவு = 0.8915725423

= 1.022794272 × 0.8915725423

அடிப்படை வேகம் = 0.9118952893 கி.மீ/வினாடி

= 0.911.. 27.32166 × 86400

ஒரு மாதத்திற்கு = 2152612.269 கி.மீ/ மாதம்

= 2152612.269×12

ஆண்டுக்கு = 25,831,347.228 கி.மீ

25,831,347.228× 1000 ஆண்டு = 25,831,347,228 கி.மீ

எனவே 1000 ஆண்டுகளில் சந்திரன் 25,831,347,228 கி.மீ தூரத்தை கடக்கும்

இப்போது நாம் தூரத்தைப் பெறுகிறோம், எங்களுக்கு ஏற்கனவே நேரம் உள்ளது, அதாவது 1 நாள். இப்போது நாம் வேக சூத்திரத்தைப் பயன்படுத்த வேண்டும்.

தூரம் =25,831,347,228 கிமீ

நேரம் = 86164 வினாடிகள் (பக்க நிலா நாள்)

வேகம் = 25,831,347,228 ÷ 86164

= 299792 கிமீ/வி

ஒளியின் சரியான வேகத்தை நாம் பெறுகிறோம்.

இறுதியாக...

சகோதர, சகோதரிகளே!

நீங்கள் இதைப் படிக்கும்போதே உங்களை திகைக்க வைத்திருக்கும் என்று நம்புகிறோம்..

குர்ஆனில் இவ்வளவு நுணுக்கமான தகவல்கள் இருப்பதாக நீங்கள் நினைக்காத பல இடங்களில் குர்ஆன் வசனங்கள் உங்களை ஆச்சரியப்படுத்தியிருக்க வேண்டும், இல்லையா...

மேலும் குரானை படிக்க ஆர்வமாக உள்ளீர்களா?

கவலைப்பட வேண்டாம்

பின் அட்டையில் **குர்ஆன் QR குறியீடு** உங்களுக்காக கொடுக்கப்பட்டுள்ளது. ஆறு மொழிகளில் கிடைக்கும் முழுமையான குர்ஆனைப் பதிவிறக்கம் செய்து, உங்களுக்கு விருப்பமான மொழியைத் தேர்வுசெய்து படிக்கவும்.

இது உங்களை மேலும் நம் அனைவரையும் படைத்த அந்த ஓர் இறைவனின் பால் ஈர்க்கக்கூடும்...

அனைவரையும் சரியான பாதையில் இறைவன் வழிநடத்தட்டும்!

வாருங்கள், முழு பிரபஞ்சத்தையும் படைத்த அந்த ஒரே இறைவனை மட்டுமே வணங்குவோம். இரு உலகங்களையும் வெல்வோம்.

கடைசி பக்கத்தில் **QR குறியீடு** கொண்ட இன்னும் சில புத்தகங்களை நாங்கள் வழங்கியுள்ளோம். படித்து தெளிவு பெற அழைக்கிறோம்.

ﷺ

❁ வாழ்த்துக்கள்! ❁

முஸ்லிமாக ஆவதும் முஸ்லிமாக இருப்பதும் எப்படி?

நாம் அறிய வேண்டியது என்ன?

கீழ்க்கண்ட உறுதிமொழியை கூறுவதன் மூலமாகவும் ஒருவர் முஸ்லிமாக ஆக முடியும்.

"அஷ்ஹது அ(ன்)ல்லாயிலாஹ இல்லல்லாஹ் வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வ ரசூலுஹு"

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்றும், முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் நான் சாட்சி பகர்கின்றேன்'

உங்களது வாழ்க்கையின் நோக்கத்தை நிறைவேற்றிட, உண்மைக்குப் பணிந்து உங்களைப் படைத்தவனை ஏற்றுக் கொள்வதற்கு இது தகுந்த நேரமல்லவா?

ஷஹாதா (நம்பிக்கை - உறுதிமொழி)

இஸ்லாமின் முதல் தூண், நம்பிக்கை கொள்வதாகும். அந்த நம்பிக்கையை 'கலிமா' என்று கூறப்படும் 'ஷஹாதா' மூலம் வெளிப்படுத்துவதாகும். அஷ்ஹது அ(ன்)ல்லா இலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு

பொருள்: அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்று சாட்சி பகர்கின்றேன். முஹம்மது (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் அடியார் என்றும், அவனது தூதர் என்றும் நான் சாட்சி பகர்கிறேன்.

உறுதிமொழி : அஷ்ஹது அ(ன்)ல்லாயிலாஹ இல்லல்லாஹ்

உறுதிமொழியின் முதல் பாகத்தில் இறைவன் மனித சமுதாயத்திற்கு அருளியுள்ள மிக முக்கியமான உண்மை அடங்கியுள்ளது. எல்லாம் வல்ல அல்லாஹ்வைத் தவிர வணங்குவதற்குரிய இறைவன் வேறு யாருமில்லை என்பதே அது.

இறைவன் குர்ஆனில் குறிப்பிடுகின்றான்;

உங்களுக்கு முன்னர் நாம் அனுப்பிய தூதர்களுக்கெல்லாம். "நிச்சயமாக என்னைத் தவிர வணக்கத்திற்குரிய வேறு இறைவன் இல்லவே இல்லை என்னையே நீங்கள் வணங்குங்கள்" என்று நாம் வஹ்யி அறிவிக்காமலில்லை. (அல் குர்ஆன் 21:25)

இந்தக் கலிமாவைச் சொல்வதன் மூலம், அனைத்துப் படைப்புகளையும் படைத்தவன் அல்லாஹ் ஒருவனே என்றும், அவன்தான் இந்தப் பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொருவர் மீதும், ஒவ்வொரு பொருளின் மீதும் மிக உயர்ந்த அதிகாரம் படைத்தவன் என்பதை ஒரு முஸ்லிம் ஏற்றுக் கொள்கிறான்.

இதன்மூலம், அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும், எந்தப் பொருளும் வணக்கத்திற்குரியன அல்ல என்றும், அவனையே சார்ந்து, அவன்பால் நம்பிக்கை கொண்டு தன்னுடைய விசுவாசத்தையும், ஈடுபாட்டையும், கீழ்ப்படிதலையும் அவனுக்கே உரித்தாக்குகின்ற வகையில் ஒரு முஸ்லிம் தனது இதயத்தையும், உள்ளத்தையும் இறைவனுக்கு நெருக்கமாக்கிக் கொள்கிறான்.

இறைவனைத் தவிர பிறவற்றை (மலக்குகள், முஹம்மது நபி (ஸல்) உள்ளிட்ட இறைத்தூதர்கள், சமயத்துறவிகள், சிலைகள், சூரியன், சந்திரன், மரம் ஆகியன) வணங்குமாறு கட்டளையிடுவது இஸ்லாமின் அடிப்படைக் கொள்கைக்கு முரணானதாகும். ஒருவன் தனது இறப்பிற்கு முன்னர் அதற்காக வருந்தி மன்னிப்புக் கேட்டாலே தவிர இது மன்னிக்க முடியாத பாவமாகும். அனைத்து வகையான வணக்க வழிபாடுகளும் ஒரே இறைவனாகிய அல்லாஹ்வை நோக்கியே இருக்கவேண்டும்.

இறை நிராகரிப்பு என்பது, மனிதர்களின் கரங்களிலும் கற்பனையிலும் உருவான மரம் மற்றும் கல்லால் ஆன

ஆண் கடவுள்கள், பெண் தெய்வங்களை நம்புவது மட்டுமல்ல மாறாக, இஸ்லாமைத் தவிர அனைத்து வகையான பிற கொள்கைகள், மூடப்பழக்கங்களை நம்புவதும், சிறப்பு அதிகாரம் படைத்தவர்களாகவும் புனிதமானவர்களாகவும் மதத் தலைவர்களை மதித்து அவர்களை நேசிப்பதும் அவர்களுக்குக் கீழ்ப்படிவதும் இணைவைத்தலாகும்.

மேலும் இந்த இறை நிராகரிப்பாகிறது, ஜோதிடம், கைரேகை பார்த்தல், அதிர்ஷ்ட மந்திரம், குறி சொல்லுதல், மறைவான விஷயங்களைத் தெரிந்து கொள்ள முற்படுதல், சமயஞானிகளின் கல்லறைகளுக்கும், நினைவிடங்களுக்கும் சென்று தமக்காக இறைவனிடம் பரிந்துரைக்குமாறு அவர்களிடம் வேண்டுதல் போன்ற செயல்களையும் உள்ளடக்கியதாகும். அல்லாஹ்விடமே நேரடியாகப் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

தொழுகை, நோன்பு, வேண்டுதல், அடைக்கலம் நாடுதல், விலங்குகளைப் பலியிடுதல் போன்ற அனைத்து வகையான வணக்க வழிபாடுகளும் இறைவனுக்காகவே செய்யப்பட வேண்டும்.

இறைவனை மகிழ்விக்கும் செயல்களில் ஈடுபடுவது, பேசுவது, அவன் கட்டளையிட்ட, ஊக்குவித்த விஷயங்களை தனித்து நேரடியாகவோ அல்லது கூட்டாகவோ செய்வது ஆகியவையும் வணக்க வழிபாடுதான். ஆகையால், வணக்கம் என்பது இஸ்லாமின் ஐந்து கடமைகளை நிறைவேற்றுவதோடு மட்டும் குறுகிப்போய் விடவில்லை. அது வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சங்களையும் உள்ளடக்கியது.

ஒருவன் தனது குடும்பத்திற்கு உணவளிப்பது, இன்னொருவனின் மகிழ்ச்சிக்காகச் சில வார்த்தைகளைக் கூறுவது போன்ற செயல்களும் இறைவனை மகிழ்விக்கும் நோக்கில் செய்யப்பட்டால் அதுவும் ஒரு வணக்க வழிபாடேயாகும். வணக்க வழிபாடுகள் அனைத்தும் இறைவனுக்காக மட்டுமே சரியான முறையில் செய்யப்பட வேண்டும் என்பதே இதன் பொருள்.

உறுதிமொழி: அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வ ரசூலுஹு

உறுதிமொழியின் இரண்டாவது பகுதியின் பொருள் முஹம்மது (ஸல்) அவர்கள், இறைவனின் தூதராகவும், அவனது அடியாராகவும் இருக்கின்றார்கள் என்பதாகும். இது ஒருவர் நபிகளாரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து அவற்றைப் பின்பற்ற வேண்டியதை உணர்த்துகின்றது. நபி (ஸல்) கூறியவற்றையும், போதனைகளையும், அவர்கள் தம் நடைமுறைகளையும் நம்ப வேண்டும். எதனைச் செய்யக்கூடாது என்று தடுத்துள்ளார்களோ, அவற்றைத் தவிர்த்திட வேண்டும். அவர்கள் போதித்தபடி இறைவனை மட்டுமே வணங்க வேண்டும். இறைவனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட வேத வெளிப்பாடுகளே அவர்களின் போதனைகளாகும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மனித குலமே பின்பற்றத்தக்க அளவிற்கு முன் மாதிரியாக வாழ்ந்து காட்டினார்கள். எனவே அவர்களது வாழ்க்கையையும், நடைமுறைகளையும் பின்பற்ற முயற்சிக்க வேண்டும். இறைவன் கூறுகிறான்;

“நிச்சயமாக நீர் மகத்தான நற்குணமுடையவராகவே இருக்கிறீர்.”
(அல் குர்ஆன் 68:4)

மேலும் இறைவன் கூறுகின்றான்;

“எவர்கள் அல்லாஹ்வையும் இறுதிநாளையும் உறுதியாக நம்புகிறார்களோ அவர்கள் பின்பற்றி நடக்கவேண்டிய அழகான உதாரணம் நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடமே இருக்கிறது.” (அல் குர்ஆன் 33:21)

தம்முடைய சொற்களிலும், செயல்களிலும், நடவடிக்கைகளிலும் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் குர்ஆனின் போதனைகளின்படி வாழ்ந்திடவே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுப்பப்பட்டார்கள். நபிகளாரின் மனைவி அன்னை ஆயிஷா (ரலி) அவர்களிடம் நபிகளாரின் பண்புகள் பற்றி கேட்டபோது, அதற்கு அவர் 'குர்ஆனே அவர்களது பண்பாக இருந்தது' என்று கூறினார்.

கலிமாவின் இரண்டாவது பாகம், நாம் நம் வாழ்க்கையின் அனைத்து விஷயங்களிலும் நபிகளாரைப் பின்பற்றி வாழ வேண்டும் என்பதேயாகும். இறைவன் கூறுகின்றான்:

"(நபியே! மனிதர்களை நோக்கி) கூறுவீராக! நீங்கள் மெய்யாகவே அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான்." (அல் குர்ஆன் 3:31)

"....ஆகவே, நம் தூதர் உங்களுக்குக் கொடுத்ததை நீங்கள் (மனமுவந்து) எடுத்துக் கொள்ளுங்கள். அவர் எதைவிட்டும் உங்களைத் தடுத்தாரோ, அதைவிட்டு நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்." (அல் குர்ஆன் 59:7)

முஹம்மது (ஸல்) அவர்கள் இறைவனின் இறுதித்தூதர் அவர்களுக்குப் பிறகு இறைத்தூதர்கள் யாரும் வரமாட்டார்கள் என்பதும் இதன் பொருளாகும்.

"(நம்பிக்கையாளர்களே!) உங்களில் உள்ள ஆண்களில் ஒருவருக்கும் முஹம்மது (நபி அவர்கள்) தந்தையாக இருக்கவில்லை. எனினும் அவர் அல்லாஹ்வுடைய தூதராகவும் நபிமார்களுக்கு (இறுதி) முத்திரையாகவும்

(இறுதி நபியாகவும்) இருக்கிறார். (ஆகவே, அவருக்குப் பின்னர் ஒரு தூதரையும் அனுப்ப மாட்டான்) அல்லாஹ் அனைத்தையும் நன்கறிந்தவனாக இருக்கிறான்."

(அல் குர்ஆன் 33:40)

முஹம்மது (ஸல்) அவர்களின் நபித்துவத்தின் மீது நம்பிக்கை கொள்வதென்பது அவர்கள் கொண்டு வந்த வழி காட்டலிலும், சுன்னாவிலும் (அவர்களது செயல்பாடுகள் அமுதமொழிகள்) நம்பிக்கை கொள்வதையும் உள்ளடக்கியதாகும். அவர்களது வழிகாட்டுதல்களை விசுவாசமாகப் பின்பற்ற வேண்டும் என்பதையும் அது வலியுறுத்துகிறது. முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஒரு மனிதரே.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தூய்மையான நேரிய பண்பும், அசாரணமான நேர்மையும், அல்லாஹ்வின்பால் அசைக்க முடியாத நம்பிக்கையும் இஸ்லாமின்பால் உறுதிப்பாடும் கொண்டிருந்த போதிலும், அவர்கள் இறைத்தன்மை கொண்டவர்கள் அல்ல. எனவே, முஸ்லிம்கள் நபிகளாரை வணங்கமாட்டார்கள்.

நான் எப்படி முஸ்லிமாக ஆவது?

'இறைவனின் விருப்பத்திற்குக் கீழ்ப்படிபவன்' என்பதே முஸ்லிம் என்ற வார்த்தையின் பொருளாகும். (இனம், தேசியம், குலப் பின்னனி ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டு) முஸ்லிமாக ஆவது மிக எளிதானது. அது எந்தவிதமான முன் நிபந்தனையுமற்ற ஒரு எளிய வழிமுறையாகும். ஒருவர் தனித்தோ அல்லது பிறருடைய முன்னிலையிலோ தன்னை இஸ்லாமில் இணைத்துக் கொள்ளலாம். ஒருவர் முஸ்லிமாக வேண்டுமென்று விரும்பினால், இஸ்லாம் ஓர் உண்மையான மார்க்கம் என்ற பற்றுறுதியும் அதன்பால் ஆழமான நம்பிக்கையும் அவருக்கு இருந்தால், எந்தத் தாமதமுமின்றி, நம்பிக்கையின் உறுதிமொழியான கலிமாவைச் சொல்லி அவர்

இஸ்லாமில் இணையலாம். இஸ்லாமின் ஐந்து தூண்களில் கலிமா முதலாவதும் முக்கியமானதுமாகும். உண்மையான நம்பிக்கையுடனும், பற்றுறுதியுடனும் கலிமா சொல்வதன் மூலம் ஒருவர் இஸ்லாமிற்கு வந்து விடுகிறார்.

கலிமாவை (நம்பிக்கை உறுதிமொழியை) அரபியில் சொல்லிட முயற்சி செய்யுங்கள். **"அஷ்ஹது அ(ன்)ல்லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீகலஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு"**

இந்த நிகழ்ச்சிக்கு சாட்சி யாரும் தேவையில்லை. இதற்காகப் பெரிய விழா நடத்த வேண்டிய அவசியமும் இல்லை. ஏனெனில் இது உங்களது தனிப்பட்ட உறுதிமொழியே ஆகும். எனினும், முடிந்தால் முஸ்லிம்கள் சாட்சிகளாக இருக்க நீங்கள் கலிமாச் சொல்லி இஸ்லாமில் இணைவது விரும்பத்தக்கதாகும். ஆனால், இதற்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ இஸ்லாமில் இணைந்திடத் தாமதம் செய்யாதீர்கள். நீங்கள் முஸ்லிம் ஆன பிறகு குளித்து விட்டு இரண்டு ரகஅத் தொழ வேண்டும்.

இஸ்லாமில் சேரும் எண்ணத்துடன் உடல் முழுவதையும் நன்றாகச் சுத்தம் செய்து குளிப்பதற்கு 'குஸ்ல்' என்று பெயர். கடந்த காலத்தில் செய்த தவறுகளையும், பாவங்களையும் துடைத்தெறிந்து, அதுவரை நிகழ்ந்த செயல்களுக்காக அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் கோருவதற்கான ஒரு அடையாளப் பூர்வமான நடவடிக்கையே இது எனலாம்.

கடந்தகாலப் பாவங்கள் மன்னிக்கப்படுதல்?

"....அல்லாஹ்வைத் தவிர (இவர்களின்)
குற்றங்களை மன்னிப்பவன் யார்?"
(அல் குர்ஆன் 3:135)

முற்றிலும் இறைவனின் விருப்பத்திற்காகவே நீங்கள் இஸ்லாமில் இணைகிறீர்கள். உங்களது கடந்த காலப் பாவங்கள் மன்னிக்கப்பட்டு நீங்கள் இறைப்பற்றும், நேர்மையும் கொண்ட ஒரு புதிய வாழ்க்கையைத் துவக்குகின்றீர்கள். இஸ்லாமில் இணைவதற்கு விரும்பிய ஒருவரிடம் நபிகள் நாயகம் (ஸல்), **'உம்முடைய கடந்த காலப் பாவங்கள் மன்னிக்கப்படும்'** என்று கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (ஒரு தோழரிடம்) "இஸ்லாமில் நீர் இணைவது, முன்னர் நீர் செய்த பாவங்கள் அனைத்தையும் அழித்துவிடும் என்பது உமக்குத் தெரியாதா?" (முஸ்லிம்)

> "ஒருவன் மனப்பூர்வமாக இஸ்லாமை ஏற்றுக் கொண்டால், அல்லாஹ் அவனது முந்திய அனைத்துப் பாவங்களையும் மன்னித்து விடுகிறான். அதற்குப் பின், கணக்கு பைசல் செய்யும் பணி துவங்கும். ஒவ்வொரு நற்செயலுக்கும் 10 முதல் 700 மடங்கு வரை வெகுமதிகள் அளிக்கப்படும். அல்லாஹ் பாவமன்னிப்பு வழங்காவிட்டால் மட்டுமே தீய செயல்கள் பதிவு செய்யப்படும்" என நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள். (புகாரி)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

> "சமயம் எளிதானது. யாரொருவர் சமயத்தை பளுவாக்கிக் கொண்டாரோ அவருக்கு அதே வழியில் தொடர்ந்து செல்வது சிரமமாகி விடும். எனவே அதில் நீங்கள் அதி தீவிரம் காட்ட வேண்டாம். ஆனால், முழுமையின் பக்கம் நெருங்கி வர முயற்சிகள் மேற்கொண்டு நற்செய்திகளைப் பெற்றிடுங்கள். காலை நேரங்களிலும், பிற்பகலிலும்,

இரவின் இறுதி நேரங்களிலும் தொழுகை புரிந்து நன்மையடையுங்கள்!" (புகாரி)

ஒருவர் இஸ்லாமை ஏற்றுக் கொள்கிறார் என்றால் அவர் தனது பழைய வாழ்க்கைக்காகவும், நம்பிக்கைகளுக்காகவும் வருத்தமடைகிறார் என்றே பொருள். இஸ்லாமில் இணைவதற்கு முன்னால் புரிந்திட்ட பாவங்களுக்காக ஒருவர் அதிகம் கவலையுறத் தேவையில்லை. தாயின் வயிற்றிலிருந்து அப்போதுதான் பிறந்த பச்சிளம் குழந்தையைப் போல், இஸ்லாமில் சேரும்போது அவரது பதிவேடு சுத்தமாக இருக்கின்றது.

இஸ்லாமின் போதனைகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவம்

முஸ்லிமாக இருப்பதென்றால் என்னபொருள் என்பதை நீங்கள் தெரிந்துகொண்டு, உண்மையான இஸ்லாமிய நெறிமுறைகளின்படி வாழத் துவங்க வேண்டும். குர்ஆனும், ஹதீஸும் (நபிகளாரின் அமுதமொழிகள்) இஸ்லாமைப் பின்பற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. இறைவன் கூறுகின்றான்.

"நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் (அங்கீகரிக்கப்பட்ட) மார்க்கம் இஸ்லாம்தான்."
(அல் குர்ஆன் 3:19)

"இஸ்லாமை அன்றி (வேறொரு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் நிச்சயமாக அவரிடமிருந்து (அது) அங்கீகரிக்கப்படவே மாட்டாது. மறுமையில் அவர் நஷ்டமடைந்தவராகவே இருப்பார்."
(அல் குர்ஆன் 3:85)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. அவன் இணை, துணையற்றவன். முஹம்மது (ஸல்) அவர்கள், அவனின் தூதர் மற்றும் அடியார். ஈஸா நபி (அலை) அவர்கள், இறைவனின் தூதர். இறைவனின் வார்த்தைகள் அன்னை மர்யமின் மீது பொழியப்பட்டு அதன்மூலம் படைக்கப்பட்டவர் ('ஆகுக' என்று கூறி இறைவன் அவரைப் படைத்தான்); சொர்க்கம் என்பது உண்மை; அது போலவே நரக நெருப்பும் உண்மை என்று யார் சாட்சியம் பகர்கின்றாரோ அவரை அவரது செயல்களுக்கு ஏற்ப இறைவன் சொர்க்கத்தில் நுழையச் செய்வான்" (புகாரி)

"அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்று சாட்சி பகர்ந்து யார் இறைவனை நாடுகின்றாரோ அவரை நரகத்தில் நிரந்தரமாகத் தங்கியிருப்பதை விட்டும் இறைவன் தடுக்கின்றான்" என்று நபி (ஸல்) (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

முஸ்லிமாக இருப்பதற்கான சில முக்கிய அடிப்படையான விஷயங்கள்:

நேரான செயல்களை ஏற்றுக்கொள்வதென்பது (ஷஹாதா/ முஸ்லிமாக ஆகுவதற்கு வாக்குமூலம் அளிப்பது ஆகியன) கீழ்க்கண்ட இரண்டு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதன் அடிப்படையில் அமைவதாகும்.

1. செயல்களைச் செய்வதன் நோக்கம், முற்றிலும் அல்லாஹ்வுக்காகவே இருக்க வேண்டும். புகழ் பெறுவதற்காகவோ, புகழப்படுவதற்காகவோ செய்யக்கூடாது.

2. செயல்கள் அனைத்தும் அல்லாஹ்வின் இறுதித் தூதரான நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னாவின் (வழிமுறை) அடிப்படையிலேயே நிறைவேற்றப்பட வேண்டும்.

நீங்கள் அறிந்த விஷயங்களுக்காகப் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளீர்கள். அறியாத விஷயங்களை அறிந்து கொள்வதற்காக நேரம் ஒதுக்கவும் கடமைப்பட்டுள்ளீர்கள்.

நீங்கள் ஒரு முஸ்லிமாக இல்லையென்றால், இஸ்லாமைப் பற்றி அறிந்து கொள்ள முயற்சிப்பதும், இஸ்லாமிய மார்க்கத்தில் உங்களுக்குப் புரியாத விஷயங்களைப் பற்றி மார்க்கத்தை அறிந்தவர்களிடம் விளக்கம் கேட்டுப் பெறுவதும் உங்கள் மீது கடமையாகும்.

"நீங்கள் அறிந்திருக்கவில்லையென்றால்
அறிந்தவர்களிடம் கேளுங்கள்!"

(அல் குர்ஆன் 16:43)

அல்லாஹ்வே நீதான் நேர்வழி காட்டுபவன். இந்நூலை வாசிப்பவர்களுக்கு உனது நேர்வழியை அவர்களை அந்த நேர்வழியில் செலுத்து! புரியவை!

எல்லாப்புகழும் உனக்கே! நீ நன்கறிந்தவன்! நன்கு செவியுறுபவன்!

Quran
6 LANGUAGES



Scan here to read it

Prophet Muhammad
The Last Messenger



Scan here to read

What happens after Death?



Scan here to read

இறைத்தூதர் முஹம்மது யார் ?

(இறைவனால்) அனுப்பப்பட்ட இறைத்தூதர்களில் நான் புதிதாக வந்தவனல்ல. (எனக்கு முன்னர் இறைத்தூதர்கள் பலர் வந்தே இருக்கின்றனர்.) மேலும் என்னைப் பற்றியோ அல்லது உங்களைப் பற்றியோ என்ன செய்யபடும் என்று எனக்கு தெரியாது. (இறைவனால்) எனக்கு அறிவிக்கப்பட்டதை மட்டுமே நான் பின்பற்றுகிறேன். நான் (நம் செயல்கள் பற்றி விசாரிக்கப்படும் நியாயத் தீர்ப்பு நாளைப் பற்றி) தெளிவாக எச்சரிப்பவன் மட்டுமே, என்று கூறுவிராக !
(குர்ஆன் 46:9)

ఒక్క దేవుడా?
లేక
అనేక దేవుళ్లా?



చదవడానికి ఇక్కడ స్కాన్ చేయండి

एक भगवान?
या
अनेक भगवान?



पढ़ने के लिए स्कैन करें

Its for you!
Fellow Muslims!!



Scan here to read

Quran
6 LANGUAGES



Scan here to read it

One God?
or
Many gods?



Scan here to read

முஸ்லிம்களே!
உங்களுக்காக!!



Scan here to read

Are you also
the seeker
of True God?



Scan here to read

இயேசு, மேரி பற்றி
குர்ஆனில்
கூறப்பட்டுள்ள
உண்மைகள்



படிப்பதற்கு இங்கே க்ளேக் செய்யவும்

இறைவன்
இருக்கின்றானா?
நேரில் காட்சி
தருவானா?



படிப்பதற்கு இங்கே க்ளேக் செய்யவும்

உண்மையான
இறைவனை
தேடுபவரா நீங்கள்?



படிப்பதற்கு இங்கே க்ளேக் செய்யவும்

Truths told in
Quran about
Jesus and Mary



Scan here to read

Does God Exist?
Will He show up?



Scan here to read